உ

ஸ்ரீ ராமஜெயம்.

# இந்திரகுலாதிபர் புராண வசனம்.

இஃது

மதுரை ஜில்லா மேலூர் தாலூகா திருவாதவூர்
திரௌபதையம்மன் கோவில் அர்ச்சகர்களில் ஒருவரும்
முத்தமிழ் பிரசங்க வித்வானுமாகிய
கட்டயம்பட்டியில் வசிக்கும்
உபாத்தியாயர்

அ. மீனாட்சிசுந்தரப்பிள்ளையவர்கள் குமாரர்
சொக்கலிங்கம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

மதுரை
கணபதி விலாஸம் அச்சாபீஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1917.

[அணா 8.

THE REGISTRAR OF BOOKS
3 JUL 1917
MADRAS

Y592I
N17
142899

உ

ஸ்ரீ ராமஜெயம்.

# இந்திரகுலாதிபர் புராண வசனம்.

இஃது

மதுரை ஜில்லா மேலூர் தாலூகா திருவாதவூர்

துரோபதையம்மன் கோவில் அர்ச்சகர்களில் ஒருவரும்

முத்தமிழ் பிரசங்க வித்வானுமாகிய

கட்டயம்பட்டியில் வசிக்கும்

உபாத்தியாயர்

அ. மீனாட்சிசுந்தரப்பிள்ளையவர்கள் குமாரர்

## சொக்கலிங்கம்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

மதுரை

கணபதி விலாஸம் அச்சாபீஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1917.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 1917

147899
600 005

Y58I
N17

778
301.4520954

உ

ஸ்ரீராமஜெயம்



THE REGIS... 3-JUL... MADRAS

(காப்பு வெண்பா)

சீராருமிந்திரகுலச்செம்மலெனுமன்னவர்தம்
பேராரும்நற்சரிதம்பேசுதற்கு—வாராரும்
ஆரணத்தனைங்கரத்தனற்புதத்தன்சித்திதரும்
காரணத்தனம்புயத்தாள்காப்பு.

(பரமசிவன்)

முத்திதருமுன்னவனும்முச்சுடராய்நின்றிலங்குமூர்த்திதன்னைப்
பத்தியெனுமலரெடுத்துப்பரிந்தேற்றிமெய்யன்பாற்பனுவல்செய்து
சித்தி பெற்ற மெய்யடியாருட்கலந்த சிவக்கொழுந்தை தெவிட்டா
[மோன
சத்திபருள் சுகோதயத்தைச்சொற்றுணையையெந்நாளுந்தொழுத
[ல் செய்வாம்

(மஹா விஷ்ணு)

வந்தானைமூலமெனுமிபமுன்னோடிவருமானைப்பொடித்தானை மலர்
[க்கையாழி
நந்தானைச்சசிதான்வில்லொசித்தான்றன்னை நறுந்துளபத்தாரானை
[நயந்தோற்கின்பந்
தந்தானைக் கற்றாணிலரியானானை ஜகமனைத்துமுண்டுமிழ்ந்தாத்தி
[ஞானைச்.
சிந்தானை விந்தமெடுத்தாக்காத்தானை சீதரனை யெஞ்ஞான்றுஞ்சிந்
[தைசேர்ப்பாம்

(சிவ சுப்பிரமணியர்)

தருவினைக்கிறைவனகமகிழ்முருகன்சரவணைதனில்வருமுருகன்
குருமுனிவனுக்குக்குருபரனாதன்குஞ்சிதரஞ்சிதபாதன்

மருமலற்கடம்பின் தாரணி புயத்தான் மாது மான்மகள் துதி நயத்
[தான்
திருவுறைமயிலான் பறங்கிரியப்பன் செய்ய தாமரைப்பதந்தொழு
[வாம.

(வீரபத்திரர்)

கங்கையொடுதிங்களணி சங்கரன்றனுதல்விழியாங்கனலிற்றோன்றி
துங்கமுறத்தவமியற்றுந்தக்கனிடவேள்விதனைத்துகழதாக்கி
மங்களமாயரசுபுரிமாளவதேசத்தரசன்வணங்கப்பெற்று
பொங்குகடல்சூழுலகிலெங்குமுறைவீரணன்றாளிறைஞ்சுவோமே

(கருப்பணசுவாமி)

சுந்தரஞ்சேர்சுங்குருமால்கருங்கச்சைசயுடனரிவாள் துலங்குவாகும்
மந்திரஞ்சேர்புயமதனில்மாலையொடுதுளபமணிமகிபாமுன்னாள்
தந்திரமாயடியவர்க்காய்ச்சமர்விளைத்துச்செயங்கொடுத்துத்தரணி
[மீது
இந்திர குல மகிபர்களுக்கருள் புரியுங் கருப்பணன் றாளிறைஞ்சு
[வோமே.

(பராசக்தி)

கனத்தாள்வெங்கயமுகனுங் கந்தனுஞ் சம்பந்தனும் பாலுண்டகு
[ம்ப
தனத்தாளேயறம்வளர்த்தகரத்தாளேதிரிபுரங்கள் தழலாய்வேவச்
சினத்தாளேசிரியோர்கள் செய்தபிழை பொருத்திறக்கஞ்செய்யுஞ்
[செய்ய
மனத்தாளே நின் கமலமலர்த்தாளே யென்றலைமேல் வைத்தாள்
[வாயே,

(ஐயனார்)

மையின்மேனியன்மாகரந்தோன்றிய
செய்யதேவர்தினந்துதிதேவனைத்
துய்யபுட்கலைபூரணியாள் துதி
யையன்பாதமனுதினம்போற்றுவாம்,

(அவையடக்கம்)

தெள்ளுதமிழிலக்கணமுமிலக்கியமுந்தெளிந்துணர்ந்த
செவ்வியோர்கள்
வள்ளல்குருமுனிமுன்னம் வகுத்ததமிழ்மூன்றினாலும்
வல்லாராகி
பள்ளமுதநீருலகிற்பகருவார்நாற்கவியும்
பண்பதாக
வெள்ளைமதியினைப் பகானுற்றதுவுமதிமுன்மின்மினி
போலாமே.

---

(நூல்வரலாறு)

அலைகளைவீசி சப்திக்காநின்ற பெரியசமுத்திரஞ் சூழ்ந்த, இப்புவியின்கண், உத்தரதிசையில் குளிர்ச்சி பொருந்திய நைமிசாரண்யமென்ற ஓர் வனத்தில், ஜனகாதிபர் முதலாகிய அத்திரி மரீசி, புலத்தியன், ஆங்கிரீஷன், பரத்துவாசன், இன்னா மற்றுமுள்ள ரிஷிகளும், முனிவர்களும் தம்மைச்சூழ மத்தியில், நடுநாயகமாக எழுந்தருளியிருக்கும் சூதமுனிவரை நோக்கி அவ்வாரண்யவாசிகள் இவ்விந்திரகுலாதிபரின் சரிதையைத்திருவாய் மலர்ந்தருளவேண்டுமெனக்கேட்க, அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகன் ஆதிமத்தியாந்தரகிதன், சர்வஜீவ தயாபரன், உலோகரக்ஷகனாகிய ஸ்ரீ வைகுந்தபதியின் அம்சமாகிய தேவநாட்டரசன் சரிதையைக் கேளுங்கள் என சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்:—

(அகலிகையினுற்பவச்சருக்கம்)

(கவி)

நிலநீர்காலழல்விசும்பாயுலகமெல்லாம்நீண்டசிவனயனாகி
வரையாய்மத்தால்
அலையாரும்பயோததியைக்கடைந்துதோன்றுமமுதினை
விண்ணவர்கிரளுக்களித்துத்தூய
சிலையாலேயிலங்கைநகராளுமன்னன்சிரங்களோடு
வாங்களரச்செயித்துமீண்டு
மலர்மேவுஜனகியுடனயோத்திவந்தமாதவன்றன்
மலரடியென்மனத்துள்வைப்பாம்

(கதை)

மாதவ முனிவர்காள் கேட்பீர்களாக:—முற்காலத்தில் பூமியின்கண் புண்ணியக்ஷேத்திரமாக விளங்கும் காசிவிஸ்வநாதப்பெருமான் சன்னதியினின்று, மாதவ சிரேஷ்டராகிய துர்வாச மகாமுனிவர் ஓர்நாள் சுவாமிதரிசனம் பண்ணிக்கொண்டிருக்கையில், பரிமள சுகந்த வாசனை வீசுகின்ற அலர்ந்த செந்தாமரைப் புஷ்பம் ஒன்று அச்சிவலிங்கத்தினது திருமுடியினின்று கீழேநழுவுவதைக் கண்டு தமது திருக்கைகளால் அம்மலரைப்பூமியினிடம் கீழேவிழவொட்டாதபடி, தமதுகரத்தாலேந்திக்கொண்டு அங்கிருந்து திரும்பி விண்ணுலகடைந்து அச்சுவர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரனுக்கு இந்தப்பிரசாதத்தை அருளவேண்டுமென்று ஆனந்த சந்தோஷத்தோடு இந்திர நகரடைந்தார். தற்சமயம் இந்திரன் நான்குமருப்புகளையுடைய அயிராவதமெனப்பெயர்பெற்ற வெள்ளை யானையின்மீது அம்பாரிவைத்து அதனிடமாகவிருந்து இரண்டுபுறமும் சாமரம் வீசவும், ரத்தினமணிகள் பதித்த முத்துக்குடை அதன்மேற்பிரகாசிக்கவும், ஆலவட்டம் சுருட்டிகள் இருபுறமும் சூழ்ந்துவரவும் முப்பத்துமுக்கோடி தேவர்கள் சூழ்ந்துவரவும் மேனகை, அரம்பை, ஊர்வசி முதலிய மாதர்கள் நடனமாடவும், தேவதுந்துமி முதலிய பதினெண்வாத்தியங்களும் அண்டபகிரண்டங்களும் நடுநடுங்கத்தாம்தாமென்றார்த்து வரவும், திரிகாலங்களுமுணர்ந்த மாதவ சிரேஷ்டராகிய நாரதமுனிவர் தமது திருக்கரத்தால் ஆனந்தத்தோடு வீணைவாசிக்கவும், மஹா சம்பிரமவுல்லாசமாய் வீதியிற்பவனி வந்துகொண்டிருந்தான். அச்சமையம் துர்வாச முனிவர், இந்திரனையாசீர்வதித்து, காசிவிஸ்வநாதருடைய திருமுடியிற்சூட்டிய மலரென்று, இந்திரனிடம் கொடுக்கலானார். அதைத்தமதிருகரத்தாலுமேற்றுக்கொள்ளாமல், யானையை நடாத்தும் அங்குசக்கோலினால் வாங்கி யானையினுடைய பிடரியின்மீது வைத்தனர். அதுகண்ட முனிவர் கண்களினெருப்புப்பொரி பறக்க திரிபுவனங்களும் நடுங்க மிகுந்த கோபங்கொண்டவராகி இச்சிவபிரசாதமாகிய மலரைக்கைகளாலேற்றுச்சிரத்திலும் கண்களிலும் வைத்துக்கொள்ளாத இந்திரனைப்பார்த்தாகுலிக்கும்

சமயம், யானையானது தன்பிடரியில் சீதளமாகிய குளிர்ச்சிபொ
ருந்திய தன்மையென்னவென்று தனது துதிக்கையை நீட்டி அம்
மலரையெடுத்துப்பார்த்துப்பூமியில் நழுவவிட்டது. உடனே யா
னையானது அடி பெயர்க்கவும் அக்காலினிடமாக அடிபட்டு,
அம்மலரானது சின்னபின்னமாகச் சிதைந்துவிட்டது இதைக்கண்
ணுற்ற துர்வாசமுனிவர், பிரளயகாலவுருத்திரனைப்போல மிகுந்த
கோபத்தையடைந்து இந்திரனைப்பார்த்து, அடாபாதகா, பிர்ம்மா
விஷ்ணு, ருத்திராதிகள் முதலிய தேவர்களும் சாக்ஷாத் சிவபெரு
மானைப்பூஜித்து, மிகுந்த சிறப்பும், செல்வமும், பெருமையும்
அடைந்தனர். நீ, உன்னுடைய செல்வப்பெருக்கினால், சிவபெரு
மானது திருமுடியிற்சூடிய தாமரை மலரை நான் கொடுக்க, நீ
அலட்சியம்பண்ணினாயென்று சபிக்கலானார். அடா இந்திரா
இன்றுமுதல் உன்னுடைய செல்வமானது குறைந்து, மதுராபுரி
யை யரசுபுரியும் பாண்டியனால் உன் மகுடபங்கமாகி உனது அர
சாட்சியும் குன்றி, தாரித்தை யடையக் கடவாயென்று சாபத்தை
க்கொடுத்து, உன் வெள்ளை யானையும், காட்டானையாக, நூறு வரு
ஷம் திரியவேண்டுமெனப் புகன்று தமதாசிரமஞ்சென்றனர்.

அப்பால் இந்திரனும் மகாவியாகூலத்தையடைந்து மஹா
லெக்ஷிமியானவள் தம்மைவிட்டு நீங்கவும், தமதரண்மனைவந்துசே
ர்ந்த சின்னாளிலே செல்வமும் குறைந்து வெறுமிடியனாகி இதற்கெ
ன்செய்வோமென்றாலோசித்து சத்தியலோகஞ்சென்று சிருஷ்டி
கர்த்தாவாகிய பிர்மதேவனது திருவடியை வணங்கி, துர்வாசமுனி
வரால் நடந்த வரலாற்றை விபரமாயுரைத்தான். அதைக்கேட்ட
மலரயன் ஆலோசித்து நம்மாலாவதொன்றுமில்லையென்று இந்திர
னையழைத்துக்கொண்டு தமது தந்தையாகிய ஸ்ரீமந் நாராயணன்
வசிக்கும் வைகுந்தபதிக்குச்சென்று பரமாத்மாவாகிய கண்ணபி
ரானை இருவரும்வணங்கித்துர்வாசரால் நடந்தவிஷயங்களைச்சொ
ன்னார்கள். அதைக்கேட்டு கண்ணபிரான் மிகுந்தவாலோசனை
செய்து வாராயிந்திரா, தற்காலம் மஹாலெக்ஷிமியானவள் திருப்
பாற்கடலில் ஒழிந்திருக்கின்றனள். ஆகையால் பாற்கடலை அமு
தங்கடைந்தால் மஹாலெக்ஷிமியைக்கண்ணுற்காணலாகும். அத

ற்குத்தேவர்களால் முடியாது. பகையாளி குடியை உறவாடிக் கெடு என்ற பழமொழிப்படி அசுரர்களை மிகுந்த நேசத்துடன் அவர்களிடத்தில் அத்தியந்த ப்ரீதியைக்காட்டி, அவ்வசுரர்களுக்குத் தலைவனாகவிருந்து திரிலோகத்தையும் ஓர் குடையின்கீழ் அரசுபுரிந்துவருகின்ற பிரகலாதனன்மகன் விரோசனனென்பவனுக்கு தவ புத்திரனாகப்பிறந்த மாவெலியென்னும் அசுர சக்கரவர்த்தியைக் கொண்டு நூறுயோசனை உயரமும் பதினாயிரமயோசனை அகலமுமுள்ள மந்திரகிரி பர்வதத்தை அவ்வசுரக்கூட்டங்களால் அப்பர்வதத்தை வேரோடு பிடுங்கிவரச்செய்து திருப்பாற்கடல்மத்தியில் நாட்டி இப்பூமியைச்சுமக்கின்ற அஷ்டநாகங்களில் ஒன்றாகிய வாசுகியென்னும் பாம்பை வடமாகப்பூட்டி அத்திரிமுனிவர் புதல்வனாகிய சந்திரனைத்துணையாக நிறுத்தி அன்னாகத்தின் வாற்புரம தேவர்களும் தலைப்புரம் ராக்ஷதருமாக நின்று வடம்பிடித்து அமுதங் கடைந்தால் மஹாலெக்ஷ்மியையுமுன்னிடத்திருந்த வாகன முதலாகிய சகல செல்வங்களையும நீ பெறக்கடவையென்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே இந்திரனானவன் மாவெலிச்சக்கிரவர்த்தியிடம் சென்று அவரை மிகவும்புகழ்ந்துகொண்டாடி அவர்கள் மூலமாய் மேற்கூறிய பர்வதத்தைக்கொண்டுவந்து பாற்கடல் மத்தியில் நாட்டி அமுதங்கடைந்தனர். அம்மலையானது பூமியிற்றுளவும், மாயனாகிய எம்பெருமான் கூர்மவடிவங்கொண்டு அம்மலையைச்சுமந்திருந்தனர். இவ்வாறாகக்கடைந்த அமுதத்தை பிரமாண்டமாகிய பாத்திரத்தமைத்து சுரர் அசுரர்களிருவகைப்பேர்களையும் காவலாக நியமித்து எச்சரிக்கையாயிருக்கையில் அர்த்தராத்திரியில் வினதை புத்திரனாகிய கருடாழ்வார் ஒருவிதவிஞ்சையினால் இவர்களை அறியாமல அமுதகலசத்தையெடுத்துக்கொண்டுபோய் ஒளித்துவைத்துக்கொண்டான். அது விபரம சுராசுரர்களால் பகவானாகிய வைகுண்டவாசகன்கேட்டு இவர்களைப்படைத்துணையாகக்கொண்டு கருடனைக்கண்டுபிடித்து பதினைந்துநாளிரவு பகலாகப்போர்புரிந்து அவனை ஜெயிக்கமுடியாமல் தம்முடன்கூடவந்த சுரர் அசுரர் என்னுமிருவகைப்படையும் கருடாழ்வாருக்குப்பயந்தோடுவதைக்கண்ட கண்ணபிரான் கருடனை ஏமாற்ற

வேண்டுமென்ற கருத்தை உட்கொண்டவராகி வாராய் கருடா நீ மகா சமர்த்தன், நம்முடைய அஸ்திர சஸ்திர பாணங்களையெல்லாமுன் சரீரத்திற்றைக்கவொட்டாமல் உன்சிறகின் காற்றுவிசையினாலும் கால்களாலும் மூக்கினாலும் அவ்வாயுதங்களை பின்னிட்டோடச்செய்து நம்முடைய சைனியங்களையெல்லாம் புறங்காட்டியோடத்துரத்திவிட்டமையால் நீ மகா சுத்தவீரனென்று உன்னை மெச்சி மிகவும் ஆனந்தமடைந்தேன். ஆகையால் என்னுனக்கு வேண்டிய வரத்தைத்தரக்கருதினேன், உனக்கு வேண்டிய வரத்தைக்கேளென்றனர். அதற்கவன் குலுங்க நகைத்துப்புன்சிரிப்புடன் சொல்வான். வாராய் கிருஷ்ணா நீயுமுன் படையுமெனக்காற்றாது தோற்றோடியதல்லாமல் வரந்தருகிறேனென்றுசொல்லவந்தாய் உன்னிடம் வரமேற்றுக்கொள்வது மஹாகேவலம். உனக்கு வேண்டிய வரத்தை என்னிடங்கேள் நான்தருகிறேனென்றனன். அதைக்கேட்ட கபட நாடக சூஸ்திராவதாரியாகிய பகவான் புன்சிரிப்புக்கொண்டு அப்படியானால் மிகவும் சந்தோஷம் நான் கேட்கும் வரம் தருவதாகப்பிரதிக்ஞை செய்வையேயாகில் உன்னிடம் வரம் கேட்கலாகுமென்றனர். நீர் கேட்டபடியே வரந்தாராவிடில் போர்முகத்தில் புறமுதுகாட்டியோடினவரடையுங்கதியையடைவேனென்று கருடன் சொல்ல உடனே பகவானானவர் கருடனைப்பார்த்து நீ களவிற்கொண்டுபோன அமுதகலசத்தையுங்கொண்டுவந்து என்னிடங்கொடுத்தும் இன்றுமுதலாக நமக்கு வாகனமாகி நம்மைச்சுமந்துகொண்டு திரியவேண்டுமென்றனர். அந்தக்கருடனும் சத்தியசந்தனாதலாலினிமேல் நாம் வாக்குத்தவறுவதசத்தியமெனவெண்ணி தான் களவிற்கொண்டுபோன அமுதகலசத்தைப்பகவானிடம் கொடுத்து சுவாமிக்கு வாகனமாயினன்.

அப்பாலந்த அமுதகலசத்திலிருந்து, அயிராவதமென்னும் வெள்ளையானையும் பொன்மயமாகிய கர்ப்பகத்தருவைந்தும் காமதேனுவென்னும் பசுவும் சங்கநிதிபதுமநிதிகளும் வெள்ளைக்குதிரையொன்றும் இவ்வாறு உதயமானதின் பேரில் அவ்வமுர்தகலசத்திலிருந்து பிரக்கவேண்டுமென்ற ஆசையோடேயிருந்து முதலில் சந்திரனும் இரண்டாவது மூத்தவளும் இளையவளாகிய

லட்சுமியும் அதற்குப்பின்பு அகலிகையும் அப்பால் இரதிதேவி யும் இவ்விதமாயுதயமாயினர்கள். பின்பு மாயனுனவர் காமதேனு கற்பகவிருக்ஷம் முதலிய செல்வங்களையும் வெள்ளையானையையும் இந்திரனுக்குக்கொடுத்தும் கடலரசனாகிய வருணனுக்கு வெள்ளை குதிரையைகொடுத்தும் பாற்கடல்கடைந்த வடமாகிய வாசுகியெ ன்னும் பாம்பானது உமிழ்ந்து ஆலகாலவிடமானது தன்னையும் தேவர்களையும் கொல்லவந்தது கருதி தாங்கள் முறிந்தோடின போது கோ கோ வென்றபயமிட்ட சப்தத்தைக்கேட்டுவந்த அக ண்டாகண்ட கடாக்ஷ வீக்ஷண்ய சுத்த சைதன்னிய பரப்பிரம்ம வஸ்துவாகிய சாக்ஷாத் சிவபெருமானுனவர் அவ்விஷத்தை அமிர் தமாக உண்டருளி தங்களுக்கு பிராணனைக்கொடுத்து ரக்ஷித்தகட வுளுக்கு பெண்மகவில்லாத தன்மையைக்குறித்து ரதிதேவியை மஹாதேவருக்குப்பிள்ளையாகக்கொடுத்தும் மூத்தவளை விஸ்வகர் மாவுக்குக்கொடுத்தும் மகாலட்சுமியைத்தான் வைததுக்கொண் டும் மீதமிருந்த அகலிகையை தேவர்களும் ராக்ஷதர்களும் எனக் கு உனக்கு யென்றும் அபரிமிதமான வாதம்செய்துகொண்டிரு ந்தார்கள். அதைக்கண்ட கண்ணபிரான் நீங்கள் வாதம் செய்து கொள்ளவேண்டாம். நான் சொல்வதை கவனியுங்கள் இவ்வுலகி ன்கண் ஒருபொருளைவிரும்பி தமக்கு கிட்டவேண்டுமென்று எண் ணினவர்கள் யாரோ அவர்களுக்குப்பிரயாசையன்னியிலும் தேவ காருண்ணியமுமில்லாமல் கிட்டாதென்பது நிட்சயமாகையால் ஒவ்வொருவரும் சமுத்திரத்தினிடமாக மூழ்கி ஆயிரவருடம் த ண்ணீர்க்குள்ளிருந்து கரையேறினவர்கள் யாரோ அவருக்குத்தா னிவ்வகலிகை கிட்டுவாளென்று தீர்மானித்தனர். அதுகேட்டு இ ந்திரன் 500 வருடமும் தேவர்களும் அசுரர்களும 400, 500, 600 700, 800 வருடமிருந்து தங்களால் முடியாது கரையேறினர்கள். மற்ற முனிவர்களும் ரிஷியீஸ்வரர்களும் அவ்வாறே வந்துவிட்ட னர்கள். மாதவ சிரேஷ்டராகிய கௌதர்ம மாமுனிவர் மட்டும் ஆயிரம்வருடம்கடலில் மூழ்கியிருந்தனர். அகலிகையை அது பரியந்திரம் பூமிதேவியினடைக்கலமாகயிருக்கும்படி செய்தும் கரையேறிவந்த இந்திரன் முதலிய தேவர்களையும் அசுரர்களையும்

நோக்கிநாளைபத்தினம் அமிர்தம் பரிமாருகிறதென்று சொல்லி
ராட்சதர்களைப்போகும்படி செய்துவிட்டு தேவர்களுக்கு பந்தி
வைத்து தான மோகினியவதாரமாகி நின்று அமிர்தம்பரிமாறுகி
றதைக்கண்டு திரும்பிவந்த மாவலி சக்கிரவர்த்தியையும் தற்காலம்
இலங்காபுரியை அரசுபுரிந்துவந்த மாலியவான் மாலி சுமாலி மு
தலிய அசுரர்களோடு ஸ்ரீமந்நாராயணன் தேவர்களைப்படைத்து
ணையாகக்கொண்டு அசுரர்களை ஜெயித்து அமுர்த கலசத்தைக்
கொண்டுபோய் இந்திரனுடைய பொக்கிஷசாலையில் வைக்கும்படி
ஆக்யாபித்தருளினர்.

இவ்வாறு முடிந்தபின் ஆயிர வருடமும் சமுத்திரத்தில்
சரிவர மூழ்கியிருந்துவந்த கௌதமமுனிவருக்கு அகலிகையை
இந்திரலோகத்தில் விவாகமுடித்துக்கொடுத்து அவர்களை பூலோ
கத்திற்கு பிரய விரோதிகளாகியராட்சதக்கூட்டங்களின் இம்சை
நேரிடாதபடி விவாகம் முடிப்பிவித்த அன்றிரவுவிடியுமுன் ஸ்ரீமந்
நாராயணனே துணையாக அழைத்துக்கொண்டுவந்து தற்காலம்
ஜனகராஜன் அரசுபுரிந்துவந்த மிதிலைமாநகரத்தின் உத்திரதிசை
யில் பெரிய பூஞ்சோலையில் வசித்திருக்கச்செய்தனர். அப்பால்
பிரம விஷ்ணுக்கள் யாவரும் தங்கள் தங்களிருப்பிடம்சென்றனர்.
மேற்கூறிய ஆசிரமத்தில் அகலிகையென்னும்பதிவிரதாளும்கௌ
தம முனிவரும் வாழ்ந்துவருங்காலத்தில் தவத்துக்கும் விவேகத்
துக்கும் சிறந்த புத்திர ரத்தினத்தைப் பெற்றெடுத்து அக்குழந்
தைக்கு சதானந்தரென்னும் நாமகரணஞ்சூட்டி சௌள சாதகங்
கள் முதலானதுகளை முடித்து 5 வயதானதின்பேரில் மிதிலையில்
பள்ளிக்கூடத்தில் வைத்து உபநயனமுஞ்செய்து பிரியமாக வளர்
த்துவந்தார்கள் என்று இவ்வாறு சொல்லிமுடிந்தபின்—நைமிசா
ரண்ணியவனத்தில் சூழ்ந்திருந்த அத்திரி மரீசி காசிபர் ஆங்குலே
யர் புலஸ்தியர் முதலாகிய முனிவர்களுக்கு மத்தியில் நடுநாயக
மாச்யெழுந்தருளியிருந்து மேற்கூறிய அகலிகை உற்பவத்தைச்
சொல்லியருளிய சூதமுனிவரை நோக்கி இதுவரையிலும் தேவரீ
ருடைய வசனாமிர்தத்தைக்கேட்டு பிரமானந்தத்தையடைந்தோம்
இன்னமும்கேட்கவிரும்புகிறோம் அதாவது திருப்பாற்கடலிலே

பிறந்த மஹாலட்சுமியுடன் கூடப்பிறந்த உத்தமியாகிய அகலி
கையென்னும்பெண்ணை இந்திரன்கூடியதும் அவளுக்கு பிள்ளை
கள் பிறந்த விபரமும் இந்திரனுக்கு சாபம்கிடைத்ததும் அகலி
கைக்கு சாபம்கிடைத்ததும் அப்படியாகப்பிறந்த பிள்ளைகள் வ
ளர்ந்துவந்த விபரமும் நன்றாய்த்தெரியும்படி சொல்லியருளவே
ண்டுமென்று அம்முனிவர்கள் கேட்க சூதமுனிவர் சொல்லத்தொ
டங்கினார் :—

உ

இந்திர குலாதிப வரசர்களுற்பவச்சருக்கம்.

(கவி)

பொன்னிரமாமெனப்புவனம்படைத்துக்காத்துப்புயல்நிறமாய்
தழல்நிறமாய்த்துடைத்துப்போந்து
முன்னிரவாய்த்திளைத்துயர்ந்துமுழக்குநாரமுடுகிடவேநீண்டவட
விலைமேன்முந்தி
தொன்னிரமாமண்டரண்டமெண்ணில்கோடிதுலங்கிடவே
வயிற்றமைத்துத்தூயதாப
தன்னிரமாங்குழவியெனப்பொலிந்துதோன்றுந்தலைவனிரு
தாளினையென்றலைமேல்வைப்பாம்.

(கதை)

கேளுங்கள் முனிவர்களே அகலிகையைக்கௌதமமுனிவ
ர் மணம்புரிந்துவாழ்ந்திருக்கும்நாளில் இதற்குமுன் ஐநூறுவருட
காலமாக நீரினுண்மூழ்கியிருந்தும் அவ்வமுதவணங்கை மணமாலை
சூட்டுதற்கின்றி விருதாவாய் பிரயாசைபடைந்தோமேயென்றும்
அம்மாதின் பேரழகையும் தேனைப்போலினித்தசொல்லையுமுடை
ய சொர்ணப்பதுமையைப்போன்ற பெண்ணை எப்போது சேர்
வோமோவென்று அம்மையலென்னுமோகக்கடலில் மூழ்கியிருந்த
இந்திரனானவன் தனது பட்டஸ்திரீயாகிய இந்திராணியையும் அ
ரம்பாஸ்திரீகளையுஞ்சேர்ந்துவந்த போகங்களை வெறுத்து மையல்

மீறி தேவதூதர்களையழைத்து நீங்கள் போய் கௌதம முனிவர்
வனத்திற்சென்று புரம்பிலுள்ள விடங்களிலொழிந்திருந்து அம்மு
வரானவர் ஆச்சிரமம் விட்டு எங்கேயாவது போயிருக்குஞ்சமயந்
தெரிந்து எனக்கறிக்கையிடவேண்டுமென்றாக்கியாபித்தனர். அவ
ர்களுமக்கருத்துக்கிசைந்து அவ்வாறொழிந்திருந்து அம்முனிவரி
ல்லாத சமயந்தெரிந்து இந்திரனுக்கறிக்கைசெய்தார்கள். இந்திர
னும் சர்வாடையாபரணாலங்கிர்தனாய் யதார்த்தவடிவமாய்ப்புறப்ப
ட்டு கௌதமராச்சிரமமுன்புவந்து நின்றான். அவ்வமுதப்பாவை
யுமியாவரோவென்றையமுற்று அறிவோமென்று வெளியில் வந்து
பார்த்தனள். இவனிந்திரனென்றறிந்து மரியாதையுபசாரமியா
தொன்றுமில்லாதபடி பார்த்தாவில்லாத சமயமிவன் வந்த கெட்
டவெண்ணத்தையுணர்ந்தாச்சிரமம் புகுந்தனள்.

இந்திரனுமக்கருத்தை யுணர்ந்து பரபுருடகவனமிவளுக்
கில்லை யென்று தாம் அம்முனிவரைப்போல வேடமாறி வரத்த
வறிஞோமெனப்பலவாறு சிந்தித்துத் தமதிருப்பிடம் சென்றனனப்
பால், மன்மதபாணமும் இவ்வகலிகையினது கண்ணென்னுங் கூர்
மைபொருந்திய வேலாயுதமு மிவனுடைய மார்பிற்றைத்து தே
வாமுத முதலிய பானங்களை போசிப்பது மறந்து, சகல சுகசாத
னங்களையுமிழந்து ஆவலாயிருந்தவன், ஓர் நாள் நைமிசவனத்தில்
ரிஷிகளுமுனிவர்களுங்கூடி ஓர் பெரிய யாகவெக்கியோர்ப்பவங்க
ளைச்செய்வதாகவும் அதற்காகத்திரிமூர்த்திகள் முதலிய தேவர்க
ளும் தாமும் அந்த யாகசாலைக்குப்போவதாகவும் தங்களுக்குச்
சொல்லியனுப்பும்படி நாரதாதிமுனிவர்கள் கட்டளையிட்டபிரகா
ரம் தமக்கறிக்கைசெய்திருக்கிறேன். தாங்கள் யாகசாலைக்கெழுந்
தருளவேண்டுமென்று பொய்மையாகிய கட்டுவார்த்தையைத்தம
து தூதர்கள் மூலமாய்க்கௌதம முனிவருக்குத் தெரிவித்துவரவ
னுப்பினான். அன்னவர்கள் போய் முனிவரை வணங்கி தங்களர
சன் கட்டளைப் படியே மொழிந்தனர். முனிவரவ்வார்த்தையை
மெய்மையெனக்கருதி தமது பத்தினியிடமறிக்கை செய்தாச்சிரம
த்தில் பத்தினியைத்தனியாயிருத்தியவ்வாறு நைமிசவனஞ்சென்
றனர். முக்காலங்களையுணர்ந்த முனிவராயிருந்துமவ்வுரையைப்

பொய்மையென்றுணராதியாதெனின்—(குறள்) ஒள்ளிய தெள்ளியாராயினுமாழ்வினை, மெள்ள நுழைந்துவிடும்—என்று நாயனார் கூறியபடி அந்த அகலிகையின் வினைப்பயனானது அவ்வறிவையுணர்த்தாமல் அறிவு நீங்கியப்புறப்படலானார். பொய்மையில்லாத மனதையுடைய பரிசுத்தமாகிய முனிவர் ஆச்சிரமம் விட்டகன்ற செயலைத்தூதர்களாலறிந்த இந்திரன் பிர்ம்மானந்தமடைந்து யதார்த்தவடிவமாய்ச்சென்றுலங்கீகரிக்க மாட்டாளென்றுணர்ந்தவனாதலால் அம்முனிவரது வேடம்பூண்டு மாத்திரைக்கோலும் கமண்டலமும் கையிற்குடையும் பாதகுறடுமணிந்து வழிநடந்திளைத்தவர்போற்றளர்ச்சியடைந்து ஆச்சிரமத்துட்புகுந்தனன். அம்மாதரசி வினைப்பயனால் தன் நாயகனென்றே யதார்த்தமாக எப்போதும் அவர் வெளியிற்சென்று வருவாராகிற்றுன்செய்யும் சைத்திய உபசாரங்களைச்செய்து சிரமபரிகாரஞ்செய்யும்பொருட்டு விசிரி வீசிக்கொண்டு நின்றனள்.

பொய்மையாகிய, இந்திரமுனியும்; அம்மாதை நோக்கி நைமிசாரண்ய யாகமானது, இப்போதில்லையென்று இடையிற் சில முனிவர் கூறியதாகவும் தான் திரும்பிவந்துவிட்டதாகவும் பசிதாகமேலிட்டிருப்பதா லன்னம்பரிமார வேண்டுமென்று சொல்லித்தானும்போசித்து அவ்வணங்கையும் போசிக்கச்செய்துவிடாய் தணிந்ததின்பேரில் அதிக ஆவலோடு கூடி அவ்வணங்கையாலிங்கனம் பண்ணி இங்கித வார்த்தைகளை மொழிந்தான். அம்மாதரசி தமது நாயகனென்றே கருதியிவனது கருத்துக்கிசைந்து சரச சல்லாப வுல்லாச லீலா விநோதங்களை வினவி, சுகாநந்த போகத்தில் மூழ்கினார்கள். அக்காமவின்பமாகிய தேனைப்புஜிக்கும் போதே யிவனமது நாயகனல்ல அன்னியனென்றே தமது கருத்திலுணர்ந்து கலவிமுடிந்தபின் நீ யார்? உம்முடைய பெயரென்ன? உமது நகரெது? யதார்த்தவார்த்தையைச்சொல், இல்லையாகிலிப்போதே சபிப்பேனென்று மிகுந்த கோபத்தோடு அகலிகை சொல்லவும், இந்திரன் மனந்திடுக்கிட்டுப் பயந்து, மாதரசே, புதுமையை விரைக்கின்றேன் மன்னிக்கவேண்டுமென்று பரிதாபமாகச்சொன்னான். இவனது வரலாற்றைக்கேட்டபின்

நானுன்னைச்சபிக்காமல் மன்னிக்கிறேன். எனது கற்பானதழிந்து
விட்டது, இனிமேலென்செய்வது யான் நிருதார்த்தத்தை யடை
யப்போகிறேனா--உம்முடைய கபடத்துக்குள்ளானேனாகையாலெ
னக்கிரண்டு வரந்தரல்வேண்டுமென் றகலிகை கேட்க வதற்கிந்தி
ரன் சம்மதமானான் அப்போதகலிகை, வாருமிந்திரா, உம்முடைய
பொக்கிஷ வீட்டிலுள்ள தேவாமுர்தத்தை பிரதிதினமும் எனக்கு
ண்ணத்தருவையென்றும், அதனாற்றனது சரீரம் தளர்ச்சியின்றி
சதா கலவி சுகசாதனத்தை யடைந்துவருவதில் உற்பவிக்குங் குழ
ந்தைகளை உடனே யப்புறப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும்
ஆச்சிரமத்தில் அப்பிள்ளைகளிருக்கக்கூடாதென்றும் கேட்டுக்கொ
ண்டனள். அவ்வாறே தன் பொக்கிஷ வீட்டிலிருந்த அமுதத்
தை அகலிகைக்கீய்ந்து மீண்டும் அன்னவளைக்கூடி மருவுநாளில்
ஒன்றின்பின்னொன்றாய் ஒவ்வொருகாலங்களிலும் உதயமாகிய குழ
ந்தைகள் மூன்றையும் தம்முடைய தூதுவர் மூலமாய் தண்ட
காருண்யத்திற்கனுப்பி ஆங்குள்ள முனிவர்களும் அவர்களது பத்
தினிகளுமிப்பிள்ளைகள் மூன்றையும் வளர்த்துவரும்படி திட்டஞ்
செய்திருந்தானிந்திரனப்பால் மீண்டுமந்த அகலிகையுடனுல்லாச
மாய்க்கூடி சுகித்திருக்குநாளில் ஒருநாட்பகலில் நைமிசாரண்யாக
த்திற்குச்சென்ற கௌதமமுனிவர் திரும்பித்தமது ஆச்சிரமத்திற்
குவருவதைக்கண்டாரண்யவாசிகள் அகலிகைக்கறிக்கையிடவேய
வளதுகேட்டு கைகால்கள் நடுக்கமுற்று மனந்திடுக்கிற்று ஐயோ
யான் யென்செய்வேனென்று விசாரமுற்றவளாய் நின்றனளிதை
யறிந்த இந்திரனும் தன் புத்தியானதுசிதறி மனம்பதறி தன்திரே
கங்களெல்லாமுதறிதமது ரூபத்தைமாற்றி பூனை வடிவங்கொண்
டு கௌதம முனிவர் ஆச்சிரமத்தினிரவாரத்தின்வழி குதித்தோடி
னனதுகண்டு கௌதமமுனிவருமிந்திரனுடையகபடத்தையறிந்து
அடா பாதகா ஒருமாதின் குறிக்குவந்து கற்பழித்தாயே ஆதலா
லுனக்கு ஆயிரமாதர்க்குள்ள குறிகளுன் பாதாதிகேசபரியந்தமு
முண்டாகக்கடவதென்று சபித்தனர்.

இந்திரனும் மெய்நடுங்கி முனிவர்கூறியவாறே தக்ஷணம்
உடம்பெங்கும் பெண்குறியாய் தமதுலகத்தையடைய வெட்கம்

அடைந்து சத்தியலோகாதிபதியாகிய பிரமனிடத்தில்சென்றுதமது செய்திகளைச்சொல்லிக்கொண்டான். இதுநிற்கக்கௌதமமுனிவரும் தனதாச்சிரமம்புகுந்து தன் பத்தினியை நோக்கித் தகாத செய்கைக்குடன்பட்ட விபரமியாதென வினவ அம்மாது பயந்து மெய்நடுங்கித் தேவநாட்டரசன் தங்களைப்போலுருவமாறி வந்து ஆலிங்கனஞ்செய்தானடியாளும் பேதமையென்பது மாதர்க்கணிகலனென்ற பழமொழிப்படி பேதைமதியால் யதார்த்தமாகவெண்ணி நமது நாயகனென்றே கூடினேனென்றாள்.

முனிவரும் திரிகாலவர்த்தமானியாதலால் நடந்த செய்கை தமக்கு ஞானதிருஷ்டியினால் தெரிந்திருப்பதாலுமுதல் தடவை கூடினது உனக்கு வஞ்சகமில்லாத தன்மையேயாகினுமப்பால் பின்னரென்றுணர்ந்தும அவனால் கொடுத்தவமுதத்தைப்புசித்தும் உற்பத்தியாகிய குழந்தைகளையப்புறப்படுத்தியுமவனது கருத்துக்கிசைந்து பின்னுங்கூடியிருந்தமையால் நீ குலமகளன்று பொதுமகளாகினை ஆகையால் நீ கருங்கற்பாறையாய்ப்போகக்கடவதென்று கடுமையாகிய சாபத்தைக்கொடுத்தனர்.

உடனே அகலிகை அடியற்ற வாழைமரம்போல் அன்னவரது பாதத்தில்மோதி விழுந்து கோ கோவென்றழுதுபுலம்பி அடியாள் கருங்கல்லானால் எப்போது சாபந்தீர்ந்து சுவாமிகள் திருவடிக்கு ஊழியப்பணிவிடை செய்யப்போகிறேனென்றழுது நிற்கும் பரிதாபத்தையுணர்ந்து முனிவர் மனமிரங்கி, மாதே பிற்காலத்தில் நீளமேக சாமளவர்ணனாகிய பகவான் அயோத்தியாபுரியை அரசுபுரியும் தசரதச்சக்ரவர்த்திக்கு மகனாக அவதரித்த ராமச்சந்திரன் விஸ்வாமித்திர முனிவர்பின்னாக மிதிலாபுரிபட்டணத்திற்கு வரக்கூடும் அன்னவரது திருவடித்தாமரை உன்பேரில் பரிசித்தமாத்திரத்தில் உனது சாபம் நீங்குமென்றருளினார். அவ்வாறே கருங்கல்லாகி மிதிலாபுரிக்கோட்டை வடக்கு வாசலுக்குச்சமீபமாகிய பாறையாயிருந்தனள். அதானது ராமச்சந்திரன் வருகிற மார்க்கமதுதானென்று முனிவர்கூறினமையால் அவ்வாறங்ஙனமிருந்தனள்.

கேட்டீர்களோ ஆரண்யவாசிகளாகிய முனிவர்களே பிர்ம லோகம்புகுந்த இந்திரன் முறைமைப்பிரமன்கேட்டுமவனுடம்பெங்கும் பெண்குறியாயிருப்பதைக்கண்டும் அதிக வெட்கமும் அச்சமுமடைந்து இந்திரனையழைத்துக்கொண்டு கௌதமமுனிவரிடம்வந்து சோந்து சைத்திய உபசாரங்களைச்சொல்லி இவனைப்பரிசுத்தனாக்கவேண்டுமென்று பிரமன் முனிவரைக்கேட்டுக்கொண்டனர். முனிவரக்கருத்துக்கிசையாமல் வாராய் பிரமனே உம்முடைய நிமித்தமாக ஒரு மன்னிப்புச்செய்யலாம் அதாவது அவனுக்குமட்டிலும் பெண்குறியெனத்தோற்றும்படிக்கும் மற்றோர்களுக்கு இவனுடம்பெங்கும் ஆயிரங்கண்களாய்த்தோற்றும்படி வரத்தையருளினோமென்றனர்.

அப்பாலிந்திரனும் பிர்ம்மனும் தமதிருப்பிடம் சென்றனர் என்று சூதமுனிவர் சொல்ல மற்ற முனிவர்கள் சூதபுராணிகரைப் பார்த்து கருணைக்கடலே கிருபாநிதியே மாதவசிரேஷ்டராகிய முனிவர்களுக்கெல்லாம் சகல தருமங்களையும் போதிக்கின்ற தபோநிதியே தேவநாட்டரசனாகிய இந்திரனுக்குற்பவித்த பிள்ளைகள் தண்டகாரண்யத்தில் எவ்வாறு வளர்ந்துவந்தனர்கள் அதனைச்சொல்லியருளுகவெனக் கேட்க சூதமுனிவரும் சொல்லத்தொடங்கினார் :—

கேளுங்கள் முனிவர்களே அத்தண்டகாரண்ணிய வாசிகள் மிகுந்த பிரியத்தோடு இக்குழந்தைகளுக்குப்பசியாற்றவேண்டுமென்று திங்களுக்கு வழக்கமாகப்பால்கொடுத்துவருகிற அவ்வாரண்யப்பசுக்களையழைப்பித்து முனிவர் பத்தினிகள் குழந்தையைக் கையினிடமாகவேந்தி மடியிற்பாலுண்ணச்செய்தும் பின்னுமனேகமாய் அக்காட்டுமாடுகள் பாறைகளிற்படுத்திருக்கு மிடங்களிற்பெருகைப்பால் சொரிந்து உறைந்துபோயிருக்கிற பாற்கட்டிகளையுங் கொண்டுவந்து கொடுத்துவளர்த்து வருநாளில் பிள்ளைகளுக்கு வருடமானதின்பேரில் கனிவர்க்கங்களும் தேன்ருட்டிலுள்ள தேனையுங்கொடுத்து வளர்த்துவரும் நாளில் ஐந்துவயதில் கல்விப்பயிற்சியுஞ்செய்துவைத்து இந்திரகுமாரர்களானதால் ஆயுதப்பரீட்சையுமப்பியாசஞ்செய்யும்பொருட்டு தனு சாஸ்திரங்களைக்கற்பித்து

வில்வித்தையையும் பழக்கியவ்வனத்திலுள்ள யானை புலி கரடி சிங்கங்களிவைகளையழைத்து இவர்கள் அதன் மீதேறிச்சவாரிசெய்யவும் கற்பித்தும் இந்திரலோகத்திலுள்ள காமதேனுவையழைத்து அக்குழந்தைகளுக்கு சட்டரசவர்க்கத்துடன் அமுதளிக்கச் செய்து; அதையுண்டு வளர்ந்து புஜபலபராக்கிரம சாமர்த்தியமுள்ளவர்களாய் வாலிபதிசையையடைந்து அவ்வனத்திலுள்ள மிருகங்களையெல்லாம் வேட்டையாடியும் வீராதிவீரர்களாய் அம்முனிவர்களாச்சிரமமாகிய தண்டகாரண்யத்தில் வசித்திருந்தனர்கள்.

இவர்கள் இவ்வாறிருக்க அமராவதிக்கரசனாகிய தேவேந்திரனும் பிர்ம்மபுத்திரராயும் மாதவ சிரேஷ்டராயுமிரானின்ற நாரதமுனிவரும் ஓர்நாள் பலவாறுகப்பூலோகவரசர்களியல்பையும் தற்காலம் பிர்ம்மபுத்திரராகிய புலஸ்திய மகா முனிவருடைய சந்ததி விச்சிரவாகுமுனிவரைக்கூடி சுமாலி புத்திரியாகிய கைகையென்பவள் இராவணன் கும்பகர்னன் விபூஷணன் சூர்ப்பநகை என்னுமிந்நால்வர்களையும் பெற்று அவர்களுக்குத்தந்தையாகிய விச்சிரவாகு முனிவரால் வேதாகமபுராணங்களைக்கற்பிக்கப்பட்டும் அப்பால் சத்திய லோகாதிபதியை நோக்கி ஆண்பால் மூவரும் ஐயாயிர வருடம் பதினாயிரவருடம் தவம்புரிந்து வேண்டிய வரப்பிரசாதங்களைப்பெற்றும் பாட்டனாகிய மாலியவானரசுபுரிந்த இலங்காபுரியென்னும் நகரத்தை மேற்கூறிய விச்சிரவாகு முனிவர் கிருபாஉதையமாக அந்த இலங்கையையரசுபுரிந்து வருகின்றனர்.

இதற்குமுன் விச்சிரவாகுவின் புத்திரனான குபேரன் இந்த இலங்கையை அரசுபுரியுங்காலத்தில் தேவர்களுக்கும் தபோதனர்களுக்கும் யாதொருமிடையூறுமின்றி அவரவர்செய்யும் நித்தியகர்மானுஷ்டானங்களும் நிறைவேற்றி யாதொரு குறைவுமின்றி சுகக்ஷேமத்தையடைந்திருந்தனர்.

வாரும் நாரதமுனிவரே கேட்பீராக. நிகழ்காலத்தில் இந்த ராவணன் சுவர்க்க மத்தியபாதாளமென்னும் திரிலோகத்தையும யேகச்சக்கிராதிபதியாய் ஓர்குடைநிழலில் அரசுபுரிந்துவதருந்தன்மையினால் அவ்வசுரக்கூட்டங்கள் நவகண்டத்திலும் சப்த

தீவுகளிலும் யெங்கும் பரவி முனிவரர் முதலிய யாவருக்கும் பலவாராகத்துன்பமியற்றி இடுக்கண் செய்வதாய் வெளியாவதால் நமது புத்திரர்களாகிய அகலிகை குமாரர்கள் அத்தண்டகாரண்யத்தில் யெவ்வாறு நிர்வகித்திருக்கின்றனர்களோ யிதற்குமுன் நமது தூதர்களால் கேழ்வி யென்னெனில் நமது புத்திரர்களை யம்முனிவர்கள் அருமையாய் வளர்த்து வந்து கல்விப்பயிற்சி யுண்டாக்கி மஹாவிற்பன்னர்களாகவும் சவுரிய பராக்கிரமமுடையவர்களாகவும் வாலிபதிசையை யடைந்திருப்பதாகவும் கேள்வியுற்றேன், நேரில் பிரத்தியட்சமாய் அவர்களை யான் காண்பதற்கு யேதுவின்றி கௌதமமுனிவருடைய காரணத்தால் அதிக வெட்கமடைந்து யெவ்விடங்களிலும் வியாபிக்க மனமானது ஓர் வழிப்படாதிருந்ததது. பட்டஸ்திரீ புத்திரனாகிய உபேந்திரன் முதலானவர்களை அனவரதமும் பார்த்துவரும் தன்மையினாலுமிவர்கள் சோபமானது யேற்படவில்லை ஆரண்யவாசிகளாயிருக்கும் புத்திரர்களை கண்ணுற்காணவேணுமென்ற ஆசைமிகுந்திருக்கிறது யான் தனியே அவ்வாரண்யப்பிரவேசம் செய்வதற்கு ஆலோசனையாகவுமிருக்கிறது. ஆகையால், தபோநிதியாகிய நாரதப்பிர்ம்மமே அடியேன்மேற்கிருபை கூர்ந்து என் கூடவே யெழுந்தருளிவருவதற்கு சித்தமிருக்குமேயானால் அது யான் செய்த பாக்கியந்தானென்று நமஸ்கரித்தனன்.

அது கேட்ட திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவருமிந்திரன்மேல் மிகுந்த கருணையுடையவராய் தாமுங்கூடவருவதாய் அனுமதி செய்தருளினர் உடனே அஸ்வ வாகன ரூடர்களாகப் புறப்பட்டு தண்டகாரண்ய வனம் வந்து சேர்ந்தனர். அவ்விருவரின் வரவைக்கண்டவ்வாரண்யவாசிகளும் நாரதமுனிவருக்கு கைலாகு கொடுத்தழைத்துவரவும் சிலர் இந்திரனுக்கு சைத்திய உபசாரங்களைச் செய்தழைத்துவரவும் இவ்வாறு அழைத்துவந்து அன்னவர்களுக்கு தெற்பாசனமிட்டு மான்றோல் புலித்தோல் முதலியவாசனங்களிட்டுபசரித்தருளினர். இவ்வாறிருக்க நாரதமுனிவர் அவ்வாரண்யவாசிகளைப்பார்த்துங்களுடைய தவங்களும் நித்யகர்மானுஷ்டானங்களும் விக்கினமின்றி நடந்து வருகின்றதா

வென்று வினவினர். அதுகேட்டம்முனிவர்கள் இலங்காதீபத்தை அரசுபுரிந்துவருகின்ற இராவணுநிராக்ஷதர்களாலும் அன்னவர்களது தாய்மாமனாகிய மாரீசனென்னுமசுரன் அவனது தமர்களாகிய கரன், தூஷணன், திரிசிரன், இவர்களிவ்வாரண்யவாசிகளாக சதா யிவ்வனத்திற் சஞ்சரித்துக்கொண்டிருப்பதாலவர்களாலெங்களுக்கு நேரிடு மிடுக்கமான திவ்வளவவ்வளவென்றளவிடமுடியாததாயிருக்கிறதென்று அம்முனிவர்கள் நாரதரிடம் கூறவும் இந்திரனவர்களை நோக்கி எனது செல்வப்புத்திரர்களாகிய மூவர்களுமெவ்வாறு நிர்வகித்திருக்கின்றனரவர்களிப்போது எங்ஙனமிருக்கின்றனரவர்களைக்கண்ணுற்பார்க்க அளவற்றவாசையோடிருக்கின்றேனென்றனன், அதற்கவ்வாரண்யமுனிவர்கள் அப்புத்திரர்கள் உருவத்தில் மன்மதனை யொப்பாகவுஞ் சவுரிய பராக்கிரமத்தில் மிகுந்தவர்களாகவும் திடகாத்திரமுடைய உருவத்தோடு வாலிபதிசையை யடைந்தவர்களானதினுலும் எங்களுடைய உத்திரவை நிராகரித்து அரசர்களுக்கியல்பாகியகுணமெதுவோ அவ்வியல்பையே வகித்தவர்களா யெப்போதுமிவ்வனத்திலுள்ள மிருகங்களை வேட்டையாடுவதும் இவ்வாரண்யத்தில் வசிக்கின்றன அசுரர்களோடு கூடி அத்தசை யுணவுகளையும் மதுபானங்களையும் அவர்களுக்கு ஊட்டுவதாயும் இவ்வாறியன்ற நேசத்தன்மையினலப்புத்திரர்களுடைய சகாயமானதெங்களுக் கெவ்வளவேனுமில்லை. ஒவ்வொருவருடைய குணமும் வேருவேராகவே யிருக்கின்றதவர்களிப்போது வனத்தில் வேட்டைக்கட்டத்திலிருந்துகொண்டிருக்கிறூர்களென்றிந்திரனுக்கு முனிவர்கள் கூறவும அதுகேட்டு திரிபுவனவாசராகிய நாரதமுனிவர் இந்திரனைப்பார்த்து, ஒவ்வொரு குணமாக வேறுபட்டிருப்பதானது உற்பகாரணனுலேயே ஏற்படுந்தன்மையாயிருக்கிறது.

அதாவது, ஸ்திரீகளிடத்தில் கருவை விளைவிக்கும் ஆடவர் எத்தன்மையாகிய குணத்தை வகித்திருந்தானே அத்தன்மையாகவே முடியும். குணங்களானது மூன்று, அதாவது தாமத, இராசத, சாத்மீகமென மூன்றும், சாத்மீககுணத்தில் கற்பம்தரிக்குமேயாகில் அக்குழந்தையானது ஈகை, இரக்கம், பொறுமை, அன்பு

தயை, தாக்ஷண்யமுடைய நற்குணங்களையுடையவனும் சற்புருட னாகவிருப்பன். தாமதகுணத்தில் ஏற்படும் கருவானது, அதிக கோபதாபத்தை யுடையவனாகவும், பின்னிரக்கமுடையவனாகவும் ஈகையுடையவனாகவுமிருப்பன் ராசதகுணத்தில் ஏற்படும் கருவா னது சாம, பேத, தான, தண்டமென்னும் சதுருபாயதந்திரங்களும் கபடனாகவுமிருக்கக்கூடுமெனச் சாஸ்திரமாகையால் அப்புத்திரர் களை நேரில் பார்க்கும்பட்சத்தில் ஒவ்வொருவருடைய தன்மையு மின்னதென்றறியக்கூடும் என்றனர்.

உடனே இந்திரன் அவ்வாரண்யவாசிகள் பணிவிடைக்கா ரர்களை நோக்கி தமது புத்திரர்களை அழைத்துவரும்படியாக்கியா பித்தனர். உடனேயவர்கள் சென்று வேட்டையாடிக்கொண்டிரு ந்தவர்களைக்கண்டு தேவலோகத்தையரசுபுரியும் உங்கள் பிதாவாகி ய இந்திரனும் முனிசிரேஷ்டராகிய நாரதமுனிவருமுங்களைக் கா ணும்படி விரும்பினவர்களாய் நமதாச்சிரமத்தில் வந்திருக்கின்றன ர்கள், உங்களைப்பார்க்கவழைத்துவரச்சொன்னார்களென்றுரைத்த வார்த்தையைக்கேட்டு நாமிதுவரையிலும் நம்மை வளர்த்துவந்த முனிவர்கள் புத்திரர்களென்றிருந்தோமிப்போது புதுமையாக ந மது பிதாவானவர் இந்திரனென்றும அவர் நமமைப் பார்க்கவந்த னரென்றும் கூறுந்தன்மையினாலதி சீக்கிரமாய்ச் சென்றவர்களைப் பார்ப்போமென்று திரும்பிவந்தனர். ஆச்சிரமத்திற்கருகாக வரும் போது தானே ஒருவன் வல்லவாட்டுகளையும் வஸ்திரங்களையும் அடக்கி ஒடுக்கிக்கொண்டு நாரதமுனிவர் திருவடியினும் பிதாவி னது திருவடியினும் வணங்கி எழுந்து வணக்கமாய் நின்றனன் மற்றொருவன் வருமார்க்கத்தில் செடிகளையு கொடிகளையும் அங்கு ள்ள பட்சிகளையும் அதஞ்செய்துகொண்டு அதிக கர்வமுடையவ னாய் வந்து உபயத்திராளுடைய பாதங்களை வணங்கி நின்றனன் மற்றொருவன் வருமார்க்கத்திலேயே கர்வமில்லாதவனாக வஸ்திரா பரணங்களையும் வல்லவாட்டுகளையும் ஒடுக்கி மெல்ல மெல்ல பது ங்கி அடங்கி ஒடுங்கி மெதுவாகவந்து இருவர் பாதத்திலும் வணங் கினின்றான்.

அப்போது நாரதமகாமுனிவர் அவர்களுடையசெயல்களை உய்த்துநோக்கினர். பிதாவும் புத்திரர்களையணைத்தாலிங்கனம் பண்ணித்தழுவியும் கண்மணிகளே உங்களைப்பெற்றவன்றே பிரிந்த பாதகனாகவிருக்கின்றேனென்றுங்களை வளர்த்து வாலிபஞ்செய்ய பாக்கியஞ்செய்திலேனெனறு மனங்கசிந்து கண்ணீர் ததும்ப அவர்களது விதிவசத்தை உத்தேசித்து மனங்கலங்கியிருந்தான் அதுகண்டு நாரதமுனிவர் இந்திரனைநோக்கி பிர்மா விஷ்ணு ருத்திரன் முதலிய திரிமூர்த்திகளாலும் தவமுனிவர்களாலும் நீக்குதற்கரிய ஊழ்வலியை யாவரால்வெல்லமுடியும், நீர் கிலேசிக்கவேண்டாம் என்றிந்திரன் மனதைத்தேற்றி வியாகூலத்தை பரிகரித்தனர். அப்போது புத்திரர்களைப்பார்த்து நாரதமுனிவர் ஒவ்வொருவரும் தாமத ராசத சாத்மீகம் என்னுமுக்குணத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணத்தை யுடையவர்களா யிருக்கிறார்களென்றுத்தேசித்து இவன் சாத்மீக குணத்தையுடையவன் பாவமென்னும் அகம்பாவத்தையுடையான். மற்றொருவன் தாமதகுணத்தையுடையவன் கோபத்திலுருத்திரன் இவன் மறவன் என்றனர் மற்றொருவன் ராசத குணத்தையுடையவன் உலோக ரட்சகனாகிய மஹா விஷ்ணுவைப்போல தந்திர உபாயங்களும் ஒவ்வொருவருடைய தன்மையையறிந்தவரவர்களுக்கியல்பாக நடக்கத்தக்க தந்திரவாதியாக இருக்கின்றானிவன் கபடநாடகக்கள்வன் என்றனர் ஆகையால் மூவர்களுமூன்றுவித குணத்தையுடையவர்களாயிருக்குந்தன்மையினால் கள்ளன் மறவன் அகம்படையான் என்னும் மூவிதவகுப்பாக வகுத்திருக்கிறோமென்றனர்.

இவ்வாறு நாரதமுனிவர் கூறத்தண்டகாரண்ய முனிவர்கள் நாரதருடைய வியல்பையும் யூகத்தையும் அறிந்து அதிசவாச்சரியத்தையு மானந்தத்தையு மடைந்தனர். அப்போதிந்திரன் நாரதமுனிவரை நோக்கி சுவாமி மேகமானது வருஷிக்கின்றமழைத்துளியை மலினமில்லாதபடி பூமியினிடத்திற் சேர்ந்தமாத்திரத்தில் நிலத்தியல்புக்குத்தக்கபடி நிறமுங்குணமும் வேறுபடுமல்லவா. ஆகையாலிவர்களாரண்யவாசிகளா யசுரர்களோடு சிநேகித்திருக்குந்தன்மையினால், இவர்களுடைய நிறமும், குணமும், இய

ல்பும் வேறுபட்டிருக்கின்றன, சேரிடமரிந்து சேரென்னும் பழ மொழிப்படி தக்கோரிடத்திற்கொண்டுபோ யிவர்களைச் சேர்ப்பிக் கும்பட்சத்தில் மேன்மையும் சிறப்பும் செல்வமும் திவ்விய தேஜ சையும் பெற்று சுகமாகவாழ்வாராகையால் கருணைக்கடலாகிய த போநிதியே இப்புத்திரர்கள் நல்ல சாதுக்களைச்சேர்ந்து நன்மைய டையும்படி திருவருள் புரிந்தருளல்வேண்டுமென்றிந்திரன் கேட்க நாரதமுனிவரு மக்கருத்துக்கிசைந்து இந்திரனை நோக்கிச் சொல் லத் தொடங்கினர் கேட்டீர்களோ முனிவர்களே யென்று சூதர் சொல்ல முனிவர்கள் அவரை வணங்கி பின்வரும் வரலாற்றையும் சவிஸ்தாரமாய்ச்சொல்லியருளல் வேண்டுமெனச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்குவார் :—

திருமணச்சருக்கம்.

(கவி)

அரிதிருமகிணனரங்கமீதொழிர்வோனச்சுதாநந்தகோவிந்தன்
பரமநாரணன்மால் பரவையைக்கடைந்தோன் பாண்டவர் தூதன்
[வேயூதன்
கரியவகிகரில்கச்சியின்மர்ந்தோன்கவினுறநிறையுமஞ்சனமா
கிரிதனிலுறைவோன் சக்கிரப்பெயரோன் கேசவனென விளை கெ
[டுமே

(கதை)

கேட்பீர்கள் முனீஸ்வரர்களே நாரதமுனிவர் இந்திரனுக் குச்சொல்லியருளியதெவ்வாறெனில்

வாராய் வானாட்டரசே முற்காலத்தில் மாவலிச்சக்கிரவர்த் தியான அசுரன் சுவர்க்க மத்திய பாதாளமென்னுந் திரிலோகாதி

பதியாயரசுபுரியுநாளில் சரஸ்வதியாற்றங்கரையினிடமாக யாகசாலையொன்றியற்றி தமது குருவாகிய சுக்கிரபகவானைக்கொண்டு யாகஞ்செய்யத்தொடங்கினன். அதாவது திரிலோகத்திலுமேற்படுகின்ற சத்துருக்களை ஜெயித்து வெற்றிமாலையைச் சூடவேண்டுமெனக்கருதி சத்துருஜெயசாந்தியென்று சொல்லப்பட்ட யாகத்தை முடித்துவரும்சமயத்தில் யாகசாலைக்குவரும் யாதுலர்களுக்கும் மறையோர்களுக்கும் அவரவர்கள் கருத்துக்கிசைய பூதானம் கோதானம் அசுவதானம் கெஜதானம் சொர்னதானம் சிவிகைதானம் இதுமுதலிய பத்து தானங்களையுமில்லையென்னாது பூரணமாய் செய்துவந்தான். அதுகண்ட தேவர்கள் இயக்கர் கின்னரர் கந்தருவர் கருடகாந்தர்வர்கள் முதலிய யாவர்களும் திருப்பாற்கடலினிடமாகச்சென்று மாதவா யாதவா சிதரா பூதரா நந்தா முகுந்தா வைகுந்தா கோவிந்தா நாரணா காரணா பூரணா கேசவா வாசுதேவா அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகா ஆதிமத்யாந்தரஹிதா சர்வஜீவதயாபரா லோகரட்சகனாகிய பாற்கடல்வாசா சர்வேசா பவநாசாவென சகஸ்திரநாமங்களையுங்கூறி வணங்கினர்.

அப்போது பஹவான் சயனத்தைவிட்டெழுந்து அபயஸ்தம் தந்தியாதுகாரணமென வினவினர் அதற்கன்னவர்கள் சொல்லியதாவது சுவாமி, மாவெலிச்சக்கிரவர்த்தியானவன், தன்னிடம் வந்த பெரியோர்கட்கும், வேத வேதியர்கட்கும், அபரிமிதமான பூமிதானம் செய்துவருகிறான் அதுவிஷயம், மண்ணுலகம் போதாதாகி சுவர்க்கலோகத்தையும் தானஞ்செய்வதா யெத்தனித்தால் நாங்களென்செய்வோம், எங்களுக்கு ஜீவித்திருக்க இடமில்லையே ஆகையால், கருணாகரக்கடவுளாகிய தாமே, ஓர் வேதியராகச்சென்று தானம் வாங்கி சுவர்க்கலோகத்தையாவது எங்கட்குக் கிடைக்கும்படி அனுக்கிரகித்தருளல் வேண்டுமெனக் கேட்டுக்

கொண்டனர். பஹவானக்கருத்துக்கிசைந்து அவ்வாறு செய்வோம் நீங்கள் தம் தம் பதிசெல்லுங்களென்றனுப்பிவிட்டு தாம் ஓர் வேதியனாகி சிறிய உருவமாகிய வாமன ரூபத்தைக்கொண்டு மாவெலிச்சக்ரவர்த்தியிடஞ்சென்று தம்முடையகாலால் மூன்றடி மண் தானம் கேட்க அதற்கவன் குலுங்க நகைத்து ஓரங்குஷ்டப் பிரமாணத்திலுள்ள இந்தப்பிராமணன் காலால் மூன்றடியானதென்ன உபயோகத்திற்கியலுமென்று அக்கருத்துக்கிசைந்து தாரை வார்க்கவெத்தனிக்கையில் இரட்சகனுடைய கபட நாடகத்தையறிந்து கூடாதென்று சுக்கிரன் தடுக்கவும் மீறி மூன்றடிமண் தாரை வார்த்தபொழுது உடனே பகவான் விஸ்வ ரூபத்தைக்கொண்டு பூமியையோரடியாகவும் விண்ணுலகத்தையுந்தம்முடைய திருவடியை நிமிர்த்து ஓரடியாக அளந்தபோதுதேவலோகத்தில் இரட்சக கர்த்தாவாகிய பகவானது திருவடியைக்கண்டு ஆனந்தமடைந்து தங்கக்குடம் வெள்ளிக்குடம் இவைகளால் அவ்வுலகத்திலுள்ள மானதவாவியென்னும் தேவகங்காநதி தீர்த்தத்தை முகந்துவந்து நாரணனுடைய திருவடிக்குத்திருமஞ்சனமாட்டியபொழுது அபரிமிதமாகவத்தீர்த்தம் பூமியிலிறங்குஞ்சமயம் சிவபெருமான் கருணைபூத்து தமமுடைய சடையினிடமாகவேற்றுப்பூமியில் நழுவச் செய்தனர்.

அத்தீர்த்தமானது நதியாகப்பெருக்கெடுத்து பரதகண்டத்திலுள்ள காஸ்மீர கண்டத்தில் காசியென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தையடுத்து அந்நதியானது மாளவதேசத்திற்புகுந்து கீழ்சமுத்திரத்திற்போய் சம்மந்தப்படுகிறது. அப்புண்ணிய தீர்த்தக்கரையில் மாளவ தேசத்தரசன் அரசுபுரிகின்ற நகரமொன்றிருக்கிறது கேளுமிந்திரா—அவ்வரசன் சகல கலையுங்கற்றவல்லவன் தன்னுயிர்போல் மன்னுயிரைப்பாதுகார்க்குமுத்தமன். அவ்வரசனுக்கு மூன்றுகுமாரத்திகளுண்டு அவர்கள் சொர்னச்சாயலைப்போன்ற வடிவையுடையவர்கள் ஆகையாலிவர்களுக்கு அவ்வரசன் புத்திரிகளை மணம்புரிவித்து அந்நாட்டினிடமாயிவாகள் வசிக்கும்படி செய்வித்தால் இவர்களும் அரசர்களாகவிருந்து அரசுபுரியுந்தன்மையேற்படுமென்று நாரதமுனிவர் சொல்லியருள இந்திரன் அவ

ரைநோக்கி சுவாமி இப்பரதகண்டத்தில் வசிக்கும் மூன்று குலத்தவரேயாயினும் அம்மாளவதேயத்தரசன் எக்குலத்தவன் நமது புத்திரர்களுக்கு மணமுடிக்கத்தகுதியுண்டாவென்றுவினவ— அதுகேட்டு நாரதமுனிவர் இந்திரனுக்குரைப்பதாயினர்.

தேவநாட்டரசே கேட்பாயாக-கைலாசபதியாகிய சாக்ஷாத் சிவபெருமானுக்கு சோம சூரிய அக்கினி என்று திரிநேத்திரமுண்டல்லவா அவ்வருணத்தார்களே சந்திரகுலம் சூரியகுலம் அக்கினிகுலமென மூன்று வகையாம் அதிலிந்த மாளவ தேசத்தரசன் அக்கினிகுலமாகையாலும் நீர் விண்ணுலகமாகிய தேவலோகத்தரசனுகையாலும் உமது புத்திரர்களுக்கு அக்கினிகுலத்தில் வதுவை செய்வது தகுதியேயென்றும் அக்கினிக்கியாதொரு குற்றமுமேற்படமாட்டாதென்றும் அவர்கள் பரிசுத்தமான வருணத்தாரென்றும் எண்ணிக்கூறினேமென நாரதர்சொல்ல அதற்கிந்திரனும் நாம் தேவகுலத்தான் அகலிகையோ அமுதத்தில் மஹாலட்சுமியோடு பிறந்தவள் மேன்மையான குலத்துக்கும் அக்கினி குலத்துக்கும் சம்மந்தம் பொருந்துமாகையால் அது தக்கதேயென்று நினைத்து புத்திரர்கள் மூவரையும் தண்டகவாசிகளை நமஸ்கரித்து அன்னவர்களாசீர்வாதத்தைப்பெற்று வரும்படி இந்திரன் கட்டளையிட்டனன். அவ்வாறே தண்டகாரண்ணியவாசிகளும் வளர்த்த தந்தையர்களாதலால் மாட்சிமைதங்கிய முனிவர்களுமிப்புத்திரர்களைத் தடர்ந்து பின்னுகவரவும் நாரதமுனிவரும் இந்திரனும புத்திரர்மூவரும் அவ்விடம்விட்டுப்பிரயாணமாய் மாளவதேசத்தரசனது நகர்புரத்துக்குவர அவ்வரசன்கேள்வியுற்று எதிர்கொண்டழைத்துப்போய் ரத்தினமணி சிம்மாசனத்திலிருத்தி முனிவர்களுக்கும் இந்திரனுக்கும் அர்க்கியபாத்திய தூபதீப நைவேத்தியங்களுஞ்செய்து மலர்களைகொண்டர்ச்சித்து அவர்களை வணங்கியாக ..முன் ..ட்செய்த தபோபலனுனது தங்களைக்காணக்கிடைத்ததென்றுனந்தமடைந்ததிசயித்தனன்.

நாரதருமிந்திரனுமனமகிழ்ந்து அவ்வரசனைநோக்கி உம்மிடத்தில்வேண்டுங்காரியமொன்றுண்டு நாங்களுத்தேசித்தபடியே

உமது கருத்துமிசையுமாகில் பல்லாண்டுபல்லாண்டு வாழக்கடவையென்று வாழ்த்தினர்.

அதுகேட்டவ்வரசன் மாக்ஷிமைதங்கிய தபோநிதியாகிய தங்கள் கருத்தின்படியிசையேனாகில் விஸ்வாசபாதகர் சேருங்கதியிற் சேருவேனென ப்பிரதிக்கினை பண்ணினான். அதுகேட்டு முனிவருமிந்திரனும் ஆனந்தமடைந்து நாரதர் சொல்வதானார். வாராய் மாளவபூபதி முப்பத்துமுக்கோடி தேவர்களும் வசிக்கும் வானாட்டரசனாகிய பிரபு உமதிருப்பிடம்வந்தது நீர் முப்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனே நமது சமீபத்திலிருக்கும் மூவர்களுமிந்திரனது குமாரர்கள இவர்களை வளர்த்தவர்கள் இதோவந்திருக்கின்ற தண்டகாரண்ணிய வாசிகளாகிய மாட்சிமைதங்கிய முனிவர்கள் இம்முனிவர்களால் வேதாகம புராணங்களையும் சகலஸ்மிருதிகளையுங்கற்பிக்கப்பட்டு சகலகலைவல்லவர்களாகவுமிருக்கின்றனர். பெருமைபெற்ற அரசகுமாரர்களாதலால் யானையேற்றம் குதிரையேற்றம் பதபரீக்ஷை முதலியதும் தேர்ந்த வல்லவர்கள், படைக்கஞ்சாப் போவீரர்கள் அழகில் மன்மதனுக்கொப்பானவர்கள் கண்ட நாடு கொண்டு கொண்டநாடு கொடாதமன்ன மண்டலீகர்களென்னும் வீராதிவீரர்களாகையால் நீர் தவப்பேரால் பெற்ற ஆண்பாலொன்று பெண்பால் மூவர் உமக்குண்டல்லவா அப்புத்திரிகள் மூவரையும் இவர்களுக்கு விவாகம்செய்துவைத்து உமது நாட்டிலும் பாதிநாடு கொடுத்து அவர்களைமகுடஞ்சூட்டி அரசர்களாக்கி உன்னருமைத்திருமகனுக்காதரவாக வைத்துக்கொள்வையென எமது கருத்தைவெளியிட்டனம் என்றனர்.

அதுகேட்டவ்வரசனும மேன்மை தங்கிய தேவகுமாரர்களெனக்கு மருகர்களாகவும் எனது புத்திரிகளுக்கு மணவாளர்களாகவும்வர யானுமெனது புத்திரிகளுமியற்றிய தவப்பேற்றையென்னென்று சொலவேனென வியந்து சம்மதமானான். நாரதமுனிவரும் இப்போது நிகழுங்காலமானது உத்திராயணபுண்ணியகாலமாகவும வசந்தகாலமுமாகவிருப்பதால் முகூர்த்தம் நிச்சயிக்கவேண்டுமென்று முனிவர் தாமே யோகம் வாரம் கரணம் திதி நக்ஷத்தி

ரம் லக்கினம் முதலிய சுபயோக சுபதினமாக முகூர்த்தம் நிச்சயித்து சந்தன புஷ்ப தாம்பூலமுதலானது பரிமாறியும் வேதியர் முனிவர் யாவர்க்குந் தேவநாட்டிலுள்ள காமதேனுவை வரவழைத்து சட்டாசவர்க்கத்துடனே அன்னம்படைக்கச்செய்து நகரை அலங்கரிக்கத்திட்டஞ்செய்து மணவறை ஜோடித்து இந்திரவிமானம்போல் விமானமியற்றித் தெருக்கள்தோறும் வாழை கமுகுகள் நாட்டி தோரணங்கள் கட்டி புஷ்பமாலைகளைச்சரமாக தொங்கவிட்டு மாடங்கள்தோறும் பூரண கும்பங்களும் தூண்டா விளக்குகளுமேற்றி சர்வாலங்கிருதங்களுஞ்செய்து விஷ்ணுபாததீர்த்தமாகிய அப்புண்ணியகங்காஜலத்தை சொர்ணக்குடங்களாலெடுத்து பட்டத்து யானைமீது வைத்துக்கொண்டுவந்து பதினெண்வித வாத்தியங்களோடு தேவதுந்துமியுந் தாம்தாமென்றுமுழங்க பெண்மாப்பிள்ளைகளுக்கு மங்களஸ்நானம்செய்வித்து சர்வாடையாபரணாலங்கிர்தர்களாக்கி சுபலக்கினத்தில் மணவறைமுன்றிலும் மாப்பிள்ளைபெண்களை வைத்து நாரதருமற்ற முனிர்களும் ஓமாக்கினி வளர்த்து சுப வேளையில் மாலைசூட்டி மங்கலநாண்சாற்றும்படி செய்து செய்யவேண்டிய திருமணச்சடங்குகளை அரசர்க்குரிய வழக்கப்படியேசெய்து முடித்து பாங்கியர்களாலத்தியேந்த திருஷ்டிசுற்றி பெண் மாப்பிள்ளைகள் மணவறைவீடு புகுந்தபின் வேதியராதுலர்களுக்கு பூரிகைதானங்கொடுத்து கல்யாணத்திற்குவந்த அந்நாட்டிலுள்ள சிற்றரசர்களாகிய பட்டவர்த்தனர்களுக்கு வேண்டிய மரியாதைகளை செய்து முனிவர் கூறியவாறே தந்நாட்டிற்பாதியைத்தனது புத்திரிகளுக்கென்றே தாரைவார்த்து சந்திராதித்தர்களுள்ளவரையினும் பாரம்பரையாயாண்டனுபவித்து வருகிறதென்றும் சில சேடிகளையும் பாங்கியர்களையும் ஆதீனவித்துவான்களிற்சிலரையும் அரண்மனை ஊழியவேலைக்காரர்களிற்சிலரையும் பல்லக்கு யானை குதிரை பசுக்கள் முதலியவைகளும் இரதங்களையும் சீதன வரிசையாகக் கொடுத்து நாரதமுனிவரும் இந்திரனும் மனமகிழ்ச்சியடையும்படி செய்வித்தான்.

அப்பால் திருமணமுடிந்தபின் தண்டகாரண்ணிய முனிவர்களை அன்னவர்களாசிரமமனுப்பி நாரதனுமிந்திரனும் தங்கள் இந

வடிகளைப்பணிந்த மணப்பிள்ளைகளுக்கு ஆசீர்வதித்து அட்சதையிட்டு தமது புத்திரர்களை நோக்கி இந்திரன் கூறுவதாயினன்.

மைந்தர்களே உங்களுக்கு கிடைத்த பாதி நாட்டில் மூவர்களுக்கு நாடு பிரித்து ஒவ்வொருவர்களுக்குந் தனித்தனி கூடகோபுர மாடமாளிகைகள், அஸ்தமண்டபம், மஹாமண்டபம்கொலுமண்டபம், யானைச்சாலை, குதிரைச்சாலைமுதலானதுகளையுண்டுபண்ணிக்கொடுக்கும்படி நான் அமராவதிநகர் போய்ச்சேர்ந்தவுடனே விஸ்வகாமனையழைத்து உங்களுக்கு வேண்டியவைகளைச் சிருஷ்டித்துக்கொடுக்கும்படி யனுப்புகிறேன் நீங்கள் அந்தந்த அரண்மனைகளிலிருந்து அஷ்டைஸ்வரியங்களையும் பெற்று புத்திர பவுத்திரர்களுடனே சுகமாக வாழ்ந்து ரத்தின மணிமுடி சூட்டி ராஜநீதி தவாறுமலாறிலொரு கடமைகொண்டு அசையாமணிகட்டி நீதியாக ராஜரீகஞ்செய்து வாழக்கடவீர்களென்று தான் நெடுநாளாகப் பூஜித்து வந்த ஸ்சுவேதப்பரிவாகனாகிய பிர்ம்மபுத்திரிகளிருவரையும் மணந்து தேவநாடு கார்த்தகடவுளாகிய ஐயனார் என்னும் கடவுளை நீங்கள் குலதெய்வமாகவைத்து பக்திசிரத்தையாய் வணங்கிக்கொள்வீர்களென்று ஆக்கியாபித்து மக்களிடத்திலும் மாளவதேசத்தரசனிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு இந்திரன் தனது நாட்டுக்கெழுந்தருளினன்.

நாரதமுனிவரும் தீர்க்காயிஸ் பெற்றவர்களாக புத்திர பவுத்திரர்கள் சகிதமாய் வாழ்ந்திருப்பீர்களென வாழ்த்தி அவ்வரசனுக்கு மாசிகூறி தமதாசிரமத்திற்கெழுந்தருளினர். அப்பாலிந்திரனுந்தமதுலகடைந்த பின்பு தெய்வத்தச்சனாகிய விஸ்வகர்ம்மாவையழைத்து பரதகண்டத்தில் மாளவதேசத்தரசன் புத்திரிகளை நமது குமாரர் மூவருக்கு மணமாலை சூட்டி மாமன் வீட்டிலிருப்பதால் நீயவ்வரசனிடஞ்சென்று நாமனுப்பினதாகச் சொல்லும் பட்சத்தில் அவ்வரசனால் பாதி நாடு கொடுக்கப்படும், அந்நாட்டை மூன்று பாகமாக்கி அவரவர்களுக்கு ஏற்படும் நாட்டில் ஒவ்வொருவர்களுக்குந்தனித்தனியே அரசருக்குரிய அரண்மனைகளை இபத்தி நிமிட்டமாத்திரத்தில் சிருஷ்டித்து நமது இந்திர நகரமே

அல்லது குபேரனுடைய அழகாபுரியோவென்றியாவரும் புகழும்
படியாகச் சித்திர விச்சித்திரமாகச்செய்து அவ்வரசர்கள் தம்தம்
நாட்டினிடமாக அரண்மனையிற் கிரகப்பிரவேசம் செய்கிற கால
மும் முடிசூட்டுகிற காலமுமேககாலத்தில் நிர்ணயிக்கும்படி சோ
திடவல்லவரால் நிச்சயிக்கப்பட்ட தினத்தை நீசே நேரில்வந்து
நமக்கரிக்கை செய்யவேண்டும் இதுவல்லாமலும் கட்டிடங்களே
ற்படுத்தும் நாடானது நீர்வளம், நிலவளம் சுத்தோர்கள் வசிக்கும்
படியாகியவிடமாகவுமிருக்கவேண்டுமென்று நாம் சொன்னதாக
அவ்வரசனுக்கு நீர் தெரிவிக்கவேண்டும் அப்பாலவ்வரசன் குறிக்க
ப்படுகிற ஸ்தானங்களில் தான் நீரரண்மனை இயற்றவேண்டுமெ
ன்றுக்யாபித்தனுப்பினன்.

அவ்வாறே விஸ்வகர்ம்மனும் வந்து சுவர்க்காதிபதியினுடைய
கருத்துக்கிசைய மாளவதேசத்தரசன் குறித்த இடத்திலமைய
இந்திரன் கூறியபடி தேவருமூவருங்கண்டதிசயிக்க கட்டிடங்களை
சிருஷ்டித்து வைத்து கிரகப்பிரவேசமும் முடி சூடுகிற காலமும்
சோதிட வல்லவர்களாலே சுபயோக சுபதினத்தை நிட்சயிக்கலாகி
அதைத்தெரிந்துகொண்டு தேவநாட்டை யடைந்து தமதரசனுக்
கறிக்கையிடலானன் இந்திரனுமக்காலத்தை யெதிர்பார்த்திருந்து
தமது குருவாகிய வியாளபகவானுக்கரிக்கையிட்டு அவரோடுகூட
நாரதமுனிவர், அத்திரி, மரீசி, ஆங்கிலேயர் முதலிய முனிவர் கூட்
டத்துடனும் மற்றுமுள்ளதேவர்களுடனும் அவ்விந்திரலோகத்தி
லுள்ள அருமையாகிய பதார்த்த வகைகளும் மோகனமாலை முத்
துமாலை முதலிய ரத்தினபரணங்களும் பட்டுப்பட்டாவளிகளும்
வேண்டிய வரிசைகளுங்கொண்டு இந்திரவிமானத்திமேலறி, சம்பிர
மத்துடனே மாளவதேசத்தரசன் நகர்ப்புரத்திலுள்ள உத்தியாவ
னத்தில் வந்திறங்கி பழயபடியே வேண்டுமென்றபோது வரலாமெ
ன்றுக்யாபித்தனுப்பிவிட்டு கோட்டை வாசல் காவலாளிகளாகிய
சாரணர்களை யழைத்து அவர்களாலரசனுக்கரிக்கையிடச்செய்ய
அதுகேட்ட மாளவதேசத்தரசனுந்தமது புத்திரிகட்கேற்படுத்திய
நகரங்களை யலங்கரிக்கச்செய்து இரதம், கஜம், துரகம்பதாதிக
ளென்னும் சதுரங்கசேனைகளையும் காலாட்படைகளையும் அலங்

காரத்துடன் வரும்படி திட்டஞ்செய்து சந்தன தாம்பூல பரிமள சுகந்தாதிகள் புஷ்பமாலைகள் பழவர்க்க முதலிய எதிர்மரியாதைக்குரிய சாமான்களுடனே வாத்தியங்களொலிக்க மந்திரிமார்கள் சூழ்ந்துவர உத்தியான வனம் வந்து முனிவரர் முதலாகிய மற்ற யாவருக்கும் அவரவர்களுக்குத்தக்க மரியாதையாக வந்தனை வழிபாடு செய்தும் வாகனாதிகளிலாரோகணிக்கச்செய்து தேவகன்னியர்களுக்கும் தண்டிகை பல்லக்கு முதலானதுகள் கொடுத்தும் மஹா சம்பிரமத்துடனே அநேகர்களை வலஞ்செய்வித்துதமதரண்மனையிடம் அழைத்துக்கொண்டு சேர்ந்து அவரவர்களுக்குத்தக்க விடுதிகளமைத்து தேவாமிர்தத்துக்கொப்பாக விருந்து முதலானதுகள் செய்து சந்தன தாம்பூலங்கொடுத்து தானும் ரத்தினமணி சிம்மாசனத்திலிருந்து சொல்வான் விண்ணுலகாதிபதியும் தேவர்களும் மாதவ முனிவர்களும் இங்ஙனம் வந்து சேர இன்னகர்செய்ததவமோ அல்லதியான் செய்த தவப்பேறோ அல்லதெனது புத்திரிகள் மூவர்களும் செய்த தவமோ யாதென்று சொல்வேனென்றனன் அதுகேட்டியாவருமனமகிட்சியடைந்தனர்கள்.

இப்புத்திரர்களையருமையாகவளர்த்துப்பாதுகார்த்துவந்த தண்டகாரண்ணிய வாசிகளையுமழைத்து வரும்படிசெய்யென்றிந்திரன் சொல்ல அவ்வாறே தூதர்களாலழைக்கவவர்களும் வந்துசேர்ந்தபின் சுபயோக சுபதின சுபநக்ஷத்திர தினத்தில் சகலரும் பிரயாணமாய் விஸ்வகர்மாவாலுற்பத்திசெய்த புதுவைநகரம் வந்து சேர்ந்து சுபவேளையிலரண்மனைக்குட்பிரவேசித்துதேவகுருவினால்மண்டபசாந்திக்குறிய முறைப்படி ஓமம்செய்துமுடித்துஇந்திரன்முதலிய தேவர்களுக்கும் ரம்பாஸ்திரீகளுக்கும் பசுவினெய்யையாகாரமாகக்கொடுத்தும வேண்டிய பழவர்க்கங்களுந்தந்து முனிவர்முதலிய மற்றய யோகீஸ்வரர்களுக்கும் சட்டரசவர்க்கத்துடன் போஜனம்பரிமாறச்செய்துவேதவேதியர்களுக்குப்பிரத்தியேகமாய் போஜனநடாத்தியும பூரிகை முதலியமரியாதைகள் கொடுத்து அவரவர்களுக்கியற்றிய ஆசனத்திருந்தனர்கள்.

தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவானால் நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் அன்னவராலேயே யாகாதியெக்கியங்களுஞ்செய்து தம துநாட்டினிடமாக வரும் தேவகங்காநதியாகிய புண்ணிய தீர்த்த த்தைச்சொர்ணக்குடங்களால் யானையின்பேரில் கொண்டுவரச்செய்து இந்திரகுமாரர்கள் மூவருக்கும் அன்னவர்களது பட்டஸ்திரீ களுக்குந்திருமஞ்சனமாட்டி சர்வாடையாபரணவலங்கிருதர்களாக தம்தம் தேவிகளுடனே ரத்தினமணி சிம்மாதனங்களிலிருக்கச்செய்து சுபவேளையில் அம்மகுடமுடிகளை யானைமேல் வைத்து நகர் வலஞ்செய்வித்து வரலான இரத்தினகிரீடத்தை தேவகுருவானவர் தமது மலர்கரத்தேந்தி இந்திரனது கையிற்கொடுக்க இந்திரன் தனது கைகளால் சுபம் சுபமென்று ஸ்ரீ வைகுண்டபகவானைநினைத்து முடிசூட்டி முனிவருமியாவருமட்சதை புஷ்பமிரைத்தாசீர்வதிக்க இந்திரனும் அவ்வாறேயட்சதையிட்டு வாழ்த்தினன். மாளவ தேசத்தரசனும் மருகர்களையும் புத்திரிகளையும் வாழ்த்தியட்சதை யிட்டனன். அந்நாட்டிலுள்ள சிற்றரசர்களியாவருங்காணிக்கை சப்பங்களையும் ஆடையாபரண சீர்வரிசைகளையும் வைத்து வணங்கினர்கள்.

அப்பாலிந்திரன் நாரதன் மாளவராஜன் முதலியோர் மருமன்னிய தேசவரசர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்குமவரவர்களுக் குத்தக்க மரியாதைகளைச்செய்தனுப்பிவிட்டு புத்திரர்களுக்கு அரசுரிமைக்குறிய ராஜநீதிகளையும் போதித்து தைரிய வீரபராக்கிரமுங்களுக்கியற்கைபாகவேயிருப்பதால் சத்துருபயங்கரமின்றி யரசுபுரிந்து வாழ்வீர்களென வாழ்த்தி தேவதூதர்களால் விமானத்தையழைப்பித்து தம்முடைய குருவாகிய வியாழபகவானும் நாரதரும் மற்றுமுள்ள தேவர்களுமரம்பாஸ்திரீகளும் பிள்ளைகளை வாழ்த்தி அவ்வரசனிடம விடைபெற்றுக்கொண்டு அமராபதிப்பட்டணம் சென்றார்கள்.

அப்பாலிம்மூன்றரசர்களும் புதுவைநகரம் மஞ்சிரூழிஞ்சிமாவிந்தயென்னுமூன்று நகரையுமூவிதலரசர்களு மரசுபுரிந்துவாழுநாளில் ஒவ்வொருவர்களுக்கும் சற்புத்திரர்கள் பிறந்தார்கள் அக்குழந்தைகளுக்கு வீரப்பிரதாபன் பிரதாபருத்திரன் மார்த்தாண்டன் அனந்தகுணன் லீலாவிநோதன் விஜயன் வீரகேசரி வீரபத்திரன் தருமசங்கன் சேதிபன் பாண்டியன் என இவ்வாறுநாமகரணமிட்டு அவர்களைச்செல்வமாக வளர்த்து வித்தையப்பியாசமும் யானையேற்றம் பரியேற்றம் வில்வித்தை ஆயுதவித்தை மல்யுத்தமுதலியவிவைகளிற்றேர்ச்சியடையச்செய்தும் தேவாலயம் பிர்ம்மாலம் அன்னச்சத்திரம் மடம் முனிவரிருப்பிடம் தண்ணீர்ப்பந்தல் வாவி கூபம் தடாகம் நந்தனவனம் சோலை யிது முதலிய தருமங்களைச்செய்தும் இந்திரனால் கிடைக்கப்பட்ட புட்கலை பூரணி பாகனாகியவையனுக்கும் மாளவதேசத்தரசன் அக்கினிகுலத்தவனாகையால் சிவபெருமானுடைய அக்கினிக்கண்ணிடமாகவுதையமாகிய வீரணசுவாமியைத்தனக்கு குல தெய்வமாக வைத்துப்பூஜித்து வந்து தன் புத்திரிகளுடைய வம்சத்தைக்கார்க்கும்படி மாமனால் கொடுக்கப்பட்ட பத்திரையம்பாள் பாகனாகிய வீரய்யனுக்கும் சித்திரவிச்சித்திரமாகிய ஆலயங்களியற்றிப்பூசித்தும் வந்த அரசர்கள் தங்கள் தங்கள் குமாரர்களுக்கு அரசர்கள் வமிசத்திலே விவாகங்களை முடித்து சுபயோக சுபதினங்களில் தங்கள் புதல்வர்களுக்கு முடிசூட்டியும் நீதியுடனே அரசுபுரிந்து வரும்படி திட்டஞ்செய்து சிலநாட்சென்றபின் சற்கதியடைந்தனர்கள். இவ்வித்திரகுலமகிபரான இளவரசர்கள் அரசுபுரிந்து வந்தார்கள்.

கேட்டீர்களோ முனிவர்களேயென்று சூதமுனிவர்சொல்ல நைமிசாரண்யமுனிவர்கள் புராணிகரைப்பார்த்து சுவாமி சந்திரகுலம் சூரியகுலம் அக்கினிகுலமென்ற மூன்றிலும் அக்கினிகுலம் சிறப்புடையதென்றும் அக்குல மகளிரை இவர்களுக்குத்திருமண முடிப்பித்தார்களல்லவா அக்கினிகுலத்தின் விசேஷத்தை விபரமாகச்சொல்லியருள வேண்டுமென்றனர். முனிவரும் அவ்வாறே கருணைகூர்ந்து சொல்லத்தொடங்கினர்.

முனிவர்களே கருத்துற்றுக்கேட்பீர்களாக. முற்காலத்திலி ந்திரசபையினிடமாக வருணன் வாயு குபேரன் அக்கினிதேவன் முதலிய திக்குப்பாலகர்களும் இருடிமுனிவர்களும் சம்பிரமமாகப் பலவாறு பேசிக்கொண்டிருக்கையில் பூலோகத்தரசர்கள் யாகாதி யெக்கியங்களை வழுவாமற்செய்து வருகின்றனர்களாவென இந்தி ரன் வினவ அப்போதக்கினி பகவான் நம்மையாசரித்து ஆகுதி கொடாத உலகம் எதுவிருக்கின்றது எவ்வுலகத்திலுமனவரதமும் யான்வியாபிக்காவிடில் எப்புவனம் எவ்வுலகம் நிலைபெறுமென்று தன்னைப்புகழ்ந்துபேசவே வருணதேவன் கேட்டுக்கோபமதிகரித்து எவ்வுலகத்தும் சகலஜீவர்களுக்கும் யானே ஜீவாதாரமாகவிருக்கி ன்றேன் சகலரூபமும் என்னாலன்றோ ஜீவித்திருக்கின்றனரென்று சொல்ல இவ்விருவர்களும் தங்களைப்புகழ்ந்துபேசின விஷயத்தை ப்பற்றி பிரமாதமாகிய கலகமுண்டாயிற்று. அதுகண்டு, தேவர்க ளுமுனிவர்களும் நியாயம்பேசத்துடங்கினதில் சிலர்கள் யாகாதி யெக்கியங்கள் ஆகாரமுதலிய உணவுகள் அக்கினியினுடையவுதவி யாலேற்படுவதால் அக்கினிதேவனே விசேஷித்தவரென்று சொன் னார்கள்.

சிலர்கள் அவ்விஷயங்களுக்கெல்லா முக்கியமானவாதாரம் தண்ணீரேயல்லாமல் வேறில்லையாகையால் வருணதேவனே விசே ஷித்தவரென்றும் சொல்லினர். அக்கினியையவிக்கும்படியான தன்மை தண்ணீர்க்குண்டாகையால் நெருப்பினும் நீர் விசேஷ மென்று சிலர் கூறியவார்த்தையைக் கேட்டக்கினிதேவன் மிகுந்த கோபங்கொண்டு தேவர்களைப்பங்கப்படுத்தும்பொருட்டு நம்மைய ல்லாதபடி தேவாலய பிர்ம்மாலய நித்தியோற்சவங்கள் கல்யாண சுபசோபனங்கள் எவ்வாறு நடக்குமென்றெண்ணி ஒருவருமறியா தபடி ரகசியமாய்ப்பசுவினுடைய வாய்வழி புகுந்து வயிற்றினிட மாகவொழிந்திருந்தனர்.

அவ்வாறு சிலநாளிருந்தபோது பல்லாயிரங்கோடியண்டங் களிலும் ஒருவித சுபகாரியாகாரியங்களும் நடக்கவில்லை. பூவுலக த்திலுள்ள ஜீவஜெந்துக்களில் மானிடர்கள் அன்னாகாரமில்லாத

னேகரழிந்துவிட்டனர்கள். அதுகண்டிந்திராதி தேவர் முனிவர் முதலிய யாவரும் பூவுலகம் நசித்ததுகண்டு கவலைமனத்தராய் பிர்மனுக்குறைத்தன்னவரையுமழைத்துக்கொண்டுவிஷ்ணுபதி சென்று நடந்தவரலாற்றைச்சொல்லக்கேட்ட சர்வஞ்ஞனாகிய பஹவானதையுணர்ந்து பசுவயிற்றினிடமாயக்கினி ஒழிந்திருப்பதையறிந்து வெளியிடவே அதுகேட்ட தேவர்களு முனிவர்களுமக்காராம் பசுவினிடமாக வந்து மூன்றுதரம் பிரதட்சணம்பண்ணி அக்கினிதேவே நீரே முக்கியதேவென்று யாவரும் சொல்லி வெளியேயுதயமாகவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்கள்.

அதுகேட்டக்கினிதேவனுமகிழ்வடைந்து பசுவின்பின்புறம் உதயமாய் வெளிவந்தனன். அப்பாற்பசுவானது அக்கினிபகவானைப்பிரதட்சணம் பண்ணி இதுவரையினுமும்மைச் சுமந்திருந்த நான் முதலிய பசுவர்க்கங்களுக்கெல்லாம் நல்ல வரத்தைக்கொடுத்து ரட்சிக்க வேண்டுமெனப்பிரார்த்திக்கவே அக்கினிபகவானும் தன்னைச்சுமந்திருந்த தாயென்று மிகுந்த அன்புடன் சொல்வதாயினன்.

அதாவது என்னைச்சுமந்திருந்த தன்மையால் உன்னிடத்திலுமுன்வர்க்கங்களிடத்திலு முற்பத்தியாகும் பால், தயிர், நெய், கோமயம், கோஜலமாகிய பஞ்சகவ்வியங்களும், இருடி முனிவர்கள் தேவர்கள், தேவாலய பிர்ம்மாலய முதலாகிய யாவர்களையும் பரிசுத்தமாக்கி கிருதார்த்தத்தை படையும்படி விசேஷிக்கக்கடவதென்றும் தாம் அப்பசுவின் வயிற்றிற் குடியிருந்த தன்மையினால் பசுவும் விசேஷ பரிசுத்தமுடையதென்றும் தாம் வாய் வழியே புகுந்து பசுவின் பின்குறியினிடமாயுதயமானதற்காக சாக்ஷியாக அக்கினியினுடைய வெப்பந்தாக்கி கருப்பாகவும் சிவந்துமிருக்கக் கடவதென்றும் இக்குறியானது பசுவின் வர்க்கத்துக்கெல்லாம் உற்பத்தியாகும் கன்றுகளுக்கும் இவ்வடையாளம் விளங்கவேண்டியதெனவரத்தைக்கொடுத்து தேவர்களுடைய கவலையை நீக்கி எப்போதும்போல விளங்கியிருந்தனர்.

ஆகையால் அக்குலமானது மிகவும்பரிசுத்தமுடையதென்று சூதமுனிவர் சொல்லக்கேட்ட முனிவர்களானந்தத்தையடைந்து பின்வருமிவர்கள் சரிதையைக்கேட்க விரும்பினர்கள் அப்பால் சூதபுராணிகர் சொல்லலானார்.

கேளுங்கள் முனீஸ்வரர்களே அந்தத்திரேதாயுகத்தில் நவகண்டத்தையும் ஏழு தீவையும் ஓர் குடை நிழலில் அரசு செலுத்தி வந்த சூரியகுலத்தரசனாகிய அயோத்தியாபுரியை முற்காலத்திலாண்ட அரிச்சந்திரனுடைய மரபிலுள்ளோர்கள் வாழையடிவாழையாயரசுபுரிந்து வந்த காலத்தில் அவ்வரசனுக்கு நவகண்டத்திலுமுள்ள ராஜர்கள் பகுதிகட்டிவருகிற வழக்கம்போலயிந்த விந்திர குலமரபினராகிய மூன்று வகுப்பான அரசர்களும் அந்த அயோத்தி வேந்தனுக்கே பகுதிகட்டிவந்தனர்கள்.

இவ்வாறிருக்க இம்மூன்று வகுப்பினர்களுக்கும்சந்தானவிருத்தியுண்டாகித்தழைத்து அஷ்டைஸ்வரியங்களுடனும்வாழ்ந்து வந்தனர்கள். ஆனால் இக்குலத்தோர்களில் இவ்வளவு தலைமுறையென்றும் பட்டங்களிவ்வளவென்றுஞ்சொல்லமுடியாததாக அளவில்லாவரசர்கள் அப்பக்கத்திலுள்ள அனேக தேசங்களைக்கைப்பற்றியும் அரசுபுரிந்துவருங்காலத்தில் திரேதாயுக முடிந்து துவாபரயுகம் பிறந்து சூரியகுல வங்கிஷத்தாருடைய சக்கிரவர்த்திப் பட்டமாறி சந்திர குலவம்மிசத்தினாகிய புரூர்வச்சக்கிரவர்த்தி யென்னுமொருவன் அஸ்தினாபுரத்தை அரசுபுரியுங்காலத்தில் அங்க வங்க, கலிங்க, காஸ்மீர, சாளுவ, மாளவ, குச்சரர், பப்பரர் சீனர் மலையாள, நேபாள, சேர, சோள, பாண்டியன் முதலிய வரசர்களும் மற்ற கண்டத்திலும் ஏழு தீவினுமுள்ள அரசர்களெல்லாம் புரூர்வச்சக்கிரவர்த்திக்குப் பகுதிசெலுத்தி வந்தனர்கள் அச்சக்கிரவர்த்தியின் மரபிலுள்ளோர்கள் வழிவழியரசுபுரிந்துவருங்கால் அம்மரபிற்பிறந்த சந்தனமஹாராஜன் மூத்ததாரத்தின் குமாரனாகிய கங்காபுத்திரன் தம்முடைய பிதாவுக்கு இரண்டாவது மணமுடிக்கக்கருதி தாம் சன்னிபாச பக்குவமடைந்து மச்சகந்தி யென்பவளை பிதாவுக்கு மணமுடித்து சித்திராங்கதன் விசித்திரவீரி

யன் என இரண்டு புத்திரர்களுண்டாக அவர்களுக்கு விவாகமுடித்தபின் சந்தனமஹாராஜன் பதவியடைந்தனன்.

அப்பால் அப்புத்திரர்கள் அரசுபுரியுங்காலம் சந்ததியற்றவர்களாயிருந்து அவ்விராஜகுமாரரிருவருந் தேகவியோகமடைந்துபோயினர் அவர்களின் பாரிகளாகிய பெண்களிருவருக்குஞ் சந்ததியில்லாதிருந்த தன்மையை சன்னியாசியாகிய ஸ்ரீ வீஷ்ட்ணுமாச்சாரியரும் சிறியதாயாகிய மச்சகந்தையுமாகவாலோசித்து மச்சகந்தி முன்னே பெற்றெடுத்த வியாசமுனிவரால் தருமசந்தானமுண்டாகக்கருதி அவருடைய கிருபையினாலுதயமாகிய திருதராட்டிரன், பாண்டு, விதுரன், இவர்கள் அந்த அஸ்தினாபுரத்தை யரசுபுரியுங்காலத்தில் இவர்களுக்குள் கப்பஞ்செலுத்திவந்த அரசர்களில் சராசந்தனென்பவனும் வடமதுராபுரியையாண்ட உக்கிரசேனன் புத்திரனாகிய கஞ்சனும் அனேகம் அசுரர்களை தங்கள் கைவசப்படுத்தி அந்த ராக்ஷதக்கூட்டங்களோடு ரதகஜதுரகபதாதிகள் சகிதமாய் இவ்வஸ்தனாபுரி நீங்கலாக மற்றுமுள்ள தேசங்களையாளுகின்ற அரசர்களோடு யுத்தம்பண்ணி ஜெயித்த சராசந்தனானவன்றனது புத்திரிகளாகிய அத்திரி நாத்திரி யென்னுமிரண்டு பெண்களையும் விவாகம்செய்திருக்கிற தனது மருமகனாகிய கம்சராஜனுக்கு தோற்றோடியவரசர்களையெல்லாம் பகுதி கட்டும்படி செய்து இந்த மாளவதேசத்திலரசுபுரிந்துவந்த இந்திரகுலாதிபர்களைத்தம்மோடு யுத்தஞ்செய்ய வரும்படி தீர்மானித்து அவர்களுடைய மாடமாளிகையரண்மனை கோட்டை முதலிய நாட்டினழகைக்கண்டாசைகொண்டு அச்செல்வத்தையும் தாம் கைப்பற்றக்கருதி அன்னவர்களுடன் பத்துநாளிரவு பகலாக யுத்தம் பண்ணி அவர்களை ஜெயித்து அந்நாட்டைச் சராசந்தன்றனது கைப்பற்றினான்.

உலோக ரட்சகனாகிய பஹவான் கிருஷ்ணாவதாரமாகி. ஆயர்பாடியில் வளர்ந்து வாலிபதிசையையடைந்து வடமதுராபுரிக்கு வந்து மாமனாகிய கஞ்சனை வதைத்து தனதுபாட்டனுக்கிரசேனனுக்குப்பட்டங்கட்டி தாமிளவரசாக விருந்தரசாளுங்காலையில் கொ

மைபொருந்திய சராசந்தனுக்குப்பயந்து வடமதுராபுரியைக்கைவிட்டு கடலுக்குள் திடலில் துவாரகாபுரியையுண்டாக்கி அதனிடமாகவிருந்தரசுபுரிவாரென்று பாரதவீரர்களுண்டாவதற்குமுன்னமே இந்தப்பாரதக்கதையை மஹாமேருவினிடமாக எழுதிவைத்த வியாசமுனிவரருளிச்செய்திருப்பதால் ஜெகந்நாதனுகிய கிருஷ்ணன் சராசந்தனுக்குப்பயந்து ஓடுவதாயிருந்தால் இந்த இந்திரகுலாதிபர்கள் சராசந்தனுக்குப்பயந்து தன்னுடு நீங்கி யப்புறப்படுவதற்காட்சேபமேது கேட்டீர்களோ நைமிசமுனிவர்களேயென்று பின்னுஞ்சொல்லத்தொடங்கினர் சூதபுராணிகர்.

தங்களது நாட்டைக்கைவிட்ட இந்திரகுலாதிபர்கள் அன்னியதேசத்தரசர்களிடஞ்சென்று புஜபலவீரபராக்கிரமசாலிகளாகையால் சேனுதிபதிகளாகவும் அதிரதர் சமரதர் மஹாரதர் அர்த்தரதரென்னும் சதுர்விதத்தேர்வீரர்களாகவுமிருந்து வாழுநாளில் கலிங்கதேசத்தரசனுனவன் சோள தேசத்தைக் கைப்பற்றவெண்ணியவ்வரசனேடு யுத்தத்திற்கு வருவதாக தூதுவர் மூலமாயெச்சரிக்கை செய்யலானுன். சோளராஜனுமதுகண்டு நாம்மனுநீதி தவருதபடி நீதியாகவரசுசெலுத்துவதால் மனுநீதிச் சோழனென்று பேர்விளங்கப்பெற்று திருவாரூரென்னும் நகரத்தை யரசு செய்திங்ஙனமிருக்க கொடுங்கோலரசுபுரியும் பாதகனை கலிங்கதேசத்தரசன் யுத்தம்பண்ணவருவதாய் தெரிவிக்கின்றுனே நானென்ன செய்வேனென்று ஆரூர் சிவபெருமானுகிய தியாகராஜமூர்த்தியை ஸ்தோத்திரஞ்செய்து சோர்ந்து நித்திரையானுன்.

அது சமயம் தியாகராஜ மூர்த்தியானவர் சோழ ராஜனுடைய சொர்ப்பனத்தில்வந்து வாராய் சோழபூபதி வானுட்டரசகுலாதிபர்களாகி மூவிதவரசர்களும் சராசந்தனுக்கஞ்சி தங்களுடைய நாடுகளை நீங்கி காம்போஜதேசத்தரசன் பக்கலில் தேர்வீரர்களாகவும் போர்வீரர்களாகவும் சேனுதிபதிகளாகவுமிருந்தவ்வரசனைக்கண்ணுக்கிமைபோலப்பாதுகாத்திருக்கின்றனர். அவ்வரசனுக்கு ஓலையனுப்பி காம்போஜதேசத்தரசனேடு அந்தச்சுத்தவீரர்களையுமனக்குப்படைத்துணையாய் வரவழைப்பையேயாகில்

உனக்குச்சத்துருவாகவரும் கலிங்கதேசத்தரசனை நீஜெயிக்கலாகுமெனத்திருவாய்மலர்ந்தருளி சிவபெருமானுங் கோவிலுக்குட்சென்றனர்.

சோழனுமுடனேயெழுந்து அவ்வாறே காம்போஜதேசத்தரசனையும் தன்னிடமுள்ள சத்தவீரர்களையும் அழைத்துக்கொண்டு வரும்படி மரியாதையுடன்றிருமுகமனுப்பினன். அதைக் காம்போஜராஜன் கண்டு வீராதிவீரர்களாகிய விண்ணாட்டரசன் குலமகிபர்களுக்கறிக்கைசெய்ய தஞ்சமென்றோரை அஞ்சலென்றுதரிக்குந்தருமகுணமுடையோராதலால் அதற்கிசைந்தனர். அந்தவீரர்கள்சகிதமாய்ச்சோழநாடடைந்தார்கள். அதுகண்ட சோழனெதிர்கொண்டழைத்துவந்து ஆசாரவுபசாரத்துடன் போஜனஞ்செய்வித்து கொலுமண்டபம் வந்துசேர்ந்து தியாகராஜமூர்த்தியின் புகழை வியந்து கொண்டாடி இந்திர குலாதிபர்களுடைய புகழும் தீர வீரபராக்கிரமும் விசாரித்தவளவில் தெரிந்த சோழனனவன் இவர்களுடைய உதவி நமக்கிருக்குமாகில் நமது ராஜரீகத்துக்கெவ்விதவிடையூறும் வாராதென்பதுணர்ந்து காம்போஜதேசத்தரசனனுமதியின்பேரில் தமது முன்னோர்களிருந்து வந்த காஞ்சிபுரமென்னும் நகரத்திலுள்ள தம்முடைய அரண்மனை முதலிய கட்டிடங்களையெல்லாமவர்களுக்கே கொடுத்து சிலநாடுகளையுந்தந்து தான் பகுதிவாங்காமல் தனியரசு புரியும்படி சிற்றரசர்களாக்கி காஞ்சிபுர வளநாட்டரசர்களென வாழ்ந்திருக்கச்செய்தானவ்வண்ணம் நிகழுங்காலத்தில் நடந்த விஷயத்தைக் கேளுங்கள் முனிவர்களேயென்று சூதர் சொல்லத்தொடங்கினர்.

(கலிங்கநாடு கைக்கொண்ட சருக்கம்)

கவி

பாதியாயழுகியகால்கையரேனும் பழிதொழிலுமிழிகுலமும் படைத்தாரேனும்
ஆதியாயரவணையாயென்பாராகிலவர் கண்டீர் நாம் வணங்குமடிகளாவர்
சாதியாலொழுக்கத்தால் மிக்கோரேனும் சதுர்மறையால் வேள்வியாற்றக்கோரேனும்
போதிநான்முகன்பணியப்பள்ளிகொள்ளும் பொன்னரங்கம் போற்றுதார்புலையராமே

(கதை)

இந்த மனுநீதிச்சோழனுடனே யுத்தஞ்செய்ய நினைத்த கலிங்கராஜன் சோழராஜனுடையவியல்பையும் சுத்த வீரர் சகிதமாகவிருக்குந் தகமையையறிந்து அவ்விந்திரகுலாதிபர்களுடைய வல்லமையையும் பராக்கிரம சவுரியத்தையும் சோழனுடைய ரத கஜ துரக பதாதிகளின் திறமையையும் சுத்த வீரத்தையும் பார்க்கிறேனென்று சொல்லித்தமது மந்திரிகளுடனாலோசித்து இன்ன நாளில் உம்மோடு யுத்தம் பண்ணுவதற்கு சதுரங்கசேனைசகிதமாய் வருகிறோம் நீரெச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்றறிக்கையிட்டனன்.

அது கண்டுசோழராஜன் தீவுகளுக்கு மந்திரிகளையுந் தூதர்களையுமனுப்பி ஆரியதேசயாங்கிலேயதேசங்களிலிருந்து தமக்கு வேண்டியமட்டில் யானைகள் குதிரைகளையுஞ்சேகரித்து தேர்களையுங்காலாட்படைகளையுந்திடப்படுத்தி கலிங்காதிபதிக்குந்தனக்கும் யுத்தம் நேரிட்ட விஷயத்தை தூதர்கள் மூலமாய்த் தனக்குவேண்டிய சிலவரசர்களுக்குந்தெரியப்படுத்தி வரவழைத்து அவரவர்களுக்குத்தக்க விடுதிகளமைத்து மரியாதைகளுஞ்செய்து கலிங்கராஜன் வரவை எதிர்பார்த்திருந்தான் சோழராஜன்.

அவ்வாறே கலிங்கனும் தனக்கு நட்பாயிருக்கிற வரசர்களுக் கோலைபோக்கி வரவழைக்க வந்த அரசர்களுமவர்களது படைக ளையுங்கூட்டி தமது சதுரங்க சேனையுஞ்சூழயுத்தத்திற்கு வரலா னன் சோழராஜனும் திருவாரூர் தியாகராஜமூர்த்திக்கும் தமக்குப் புராதீனமாகிய காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாளுக்கும் ஏகாம்பர நாதருக்கும் அபிஷேக நைவேத்திய சிறப்புகள் நடாத்தி யுத்தத் திற்கு களப்பலியுங்கொடுத்து சேரநாட்டுக்கும் சோழநாட்டுக்கும் எல்லைச்சதிரமத்தியில் கொடிமுடியென்று பேர்பெற்ற ஊருக்குச் சமீபத்தில் காவேரி நதிக்கரையில் உலகமெங்கும் பெயர்பெற்று விளங்குகின்ற பராசத்தியாகிய மதுக்கரைச்செல்லாண்டியம்மன் கோவிலுக்குபுரம்பாக அடுத்த பாரிசத்தில் அந்த யீஸ்வரியாகிய காளியம்மனுக்குப் பலி பூஜை முதலியதுகளையுஞ்செய்து இம்ம னுநீதிச்சோழனுக்குடைய புலிக்கொடியை கல்லுக்கம்பத்தினிட மாக நாட்டி யுத்தம் செய்யத்துடங்கும் சமையம் தென்மதுராபுரி யை யரசுபுரிந்து வந்த மீனக்கொடியையுடைய பாண்டியராஜனும் வேதக்கொடியையுடைய மலையாளதேசத்தரசனும் ரதகஜதுரகப தாதிகளாகிய சதுரங்கசேனைத்தளங்களும் நாகசுரமேளம், நாகுஜ மேளம், தம்பூர், பிட்டில், சாரந்தா, சரமண்டலம், தம்பட்டம் கொம்பு, தவில், முரசு, டமாரம், வெற்றிச்சங்கம், விரசங்கம், வல ம்புரிச்சங்கமென்ற மூவித சங்கங்களும் பம்பம்பம் என்று முழ ங்க குடைசுருட்டி, சாமரம், விசிரி, வெண்சாமரைகள்சூழ மஹா சம்பிரமத்துடனே மதுராபுரி நாட்டிலுள்ள பட்டவர்த்தனர் பா ளையக்காரர்களும் பின்னுமுன்னுமாகத்திரண்டுவர தனது மாம னன மனுநீதிச்சோழராஜனுக்குதவியாகப்பாண்டியராஜனும் மேற் கூறிய யுத்தகளத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

அப்பால் யுத்த முரசு முழக்கி சாமரம் வீசினதின்பேரில் இருவகைப்படைகளுங்கைகலந்து யுத்தஞ்செய்ய வெத்தனிக்கு முன்னம் இந்திரகுலவரசர்களில் தற்காலம் காஞ்சிபுர நாட்டை யரசுபுரிந்த மூவகை வகுப்பிலுள்ள வீரபராக்கிரமன் விஜயப்பிர தாபன், விக்கிரமன், என்னுமரசர்கள் தங்கள் தங்கள் வகைப் புத்திரவர்க்கங்களாகிய அதிவீர பராக்கிரம சௌரியம் பொருக்

திய சேனாதிபதிகளனேகர் சகிதமாய் அனேகவாயுதபாணிகளாக சதுரங்க சேனைகளுடன் சக்கிரவர்த்தியாகிய சோழராஜன் கட்சியில் வந்துசேர்ந்து முன்னணியில் நின்று யானை வீரரும் யானை வீரரும் குதிரை வீரருங் குதிரை வீரரும் தேர்வீரருந் தேர்வீரரும் காலாட்படைகளுங் காலாட்படைகளுமாகக் கைகலந்து அபரிமிதமான யுத்தஞ்செய்யலானார்கள்.

அப்போது கலிங்கதேசாதிபதியுடைய படைகளானது முறிந்தோடினதைக்கண்டு அவர்களை யோடாதீர் நில்லுங்கள் நில்லுங்களென்று கையமர்த்தி கலிங்கதேசாதிபதி தம்முடைய தேரைத் தூண்டி சோளராஜனோடு வந்தெதிர்த்து யுத்தஞ்செய்யவும் பாண்டியனானவன் பப்பரர், சீனர் முதலிய தேசத்தரசர்களோடு யுத்தம்பண்ணவும் மலையாளதேசத்தரசன் வடுகர் குடசர் கொங்கணர் குச்சரர் சாளுவரிவர்களோடெதிர்த்து யுத்தம் பண்ணவும் இந்திரகுலாதிபர்கள் தங்கள் தேரை தூண்டி சோளராஜனுடைய தேருக்கு இரண்டு பக்கங்களிலும் நிறுத்தி யிந்திரனால் கொடுக்கப்பட்ட இடிக்கொடியானது கலிங்கருடைய படையைப்பார்த்து அண்டகடாகங்களும்வெடிபட இடியிடித்துமுழக்கிகெர்ச்சனைபண்ணவும் கலிங்கதேசத்தரசனோடெதிர்த்து கார்காலத்தில் கடகச்சந்திரன் வருங்கால் மழை வருஷித்தாலெப்படியோ அவ்வாறே தங்கள் தங்கள் வில்லை வளைத்து நாணேற்றி குணத்தொனிசெய்து பாணங்களை வருஷித்து கலிங்கனுடைய பாதாதி கேசபரியந்தம் சல்லடைக்கண்களாகத்துளைத்து அவனைக்கைகாலாட வொட்டாமலவனது வில்லைமுறித்து நாணியை யறுத்தும் மெய்தளரும்படி செய்து அவனேறியிருந்த ரதத்தையும் அச்ச வேறு ஆணி வேறு குத்துக்கால் வேறு கொடுங்கை வேறு சிகரங்கள் வேறாகச் சின்னபின்னமாய்த்தகர்த்தனர்கள்.

அப்போதக்கலிங்கராஜன் தேரைவிட்டுக்கீழேகுதித்துவேறுதேரிலேற வோடவும் இம்மூவரில் வீரபராக்ரமனென்பவன் தமக்கிந்திரனால் கொடுக்கப்பட்ட தண்டாயுதத்தை யெடுத்துப்பின்தொடர்ந்தோடி யடிக்க அவன் மூர்ச்சையாகிக் கீழ்விழவும் திரும்பி

வந்து தனது தேரிலாரோகணித்துக் கலிங்கனுக்குதவியாக வந்த வடமதுராபுரி வீரர்கள் பேரிலும் சராசந்தன் படைவீரர்கள் பேரிலும் பகாசூரன் பகதத்தன் முதலிய வீரர்கள் பேரில்யெதிர்த்து யுத்தஞ்செய்யவும் அதுகண்டிவர்கள் முன்னோர்களை யரசர்களாக்கி யாதரித்துவந்த காம்போஜதேசத்தரசனுமிவர்கள் மாமன் வர்க்கமாகிய மாளவதேசத்தரசனு மனுநீதிச் சோளனு மலையாளத்தரசனும் பாண்டியனும் யாவருமொருமுகமாகத் திரண்டு தேவகுலத்தார்க்குதவியாக வந்து யுத்தஞ்செய்து அவர்களைப்புறங்காட்டியோடத்துரத்தினார்கள்.

அது சமயங்கலிங்கராஜன் மூர்ச்சைதெளிந்து வேறு தேரிலேறி வில்லம்பெடுத்து பற்பலவாத்தியங்களை முழக்கிச்சோளனுக்குதவியாக வந்த காஞ்சிபுர வளநாட்டரசர்கள் நிற்குந்திசைநோக்கியெதிராகவந்தானிவ்வாறுவந்தவரசனைச்சூழவளைந்துகலிங்கராஜனையுமவனுக்குதவியாகவந்த மற்றுமுள்ளவரசர்களையும் விடாது பற்றிப்பதினைந்துநாளிரவுபகலிடைவிடாமல் யுத்தம்பண்ணிக்கலிங்கராஜனை ஜெயித்து வெற்றிச்சங்கமுழக்கி அவனது படைகளையுமுதுகிட்டோடச்செய்ததின்பேரில் கலிங்கனகருக்குட்பிரவேசித்து ஜெபேரிகையடித்துச்சோளராஜனுடைய புலிக்கொடியை நாட்டியவ்வரண்மனையிலாசனங்களிட்டுச்சோளராஜனையதன்மீதிருக்கச்செய்து தேவகுலாதிபர்களும் மலையாள பாண்டிய சேர காம்போஜ மாளவதேசத் தரசர்களும் சூழவிருந்து கலிங்கருடைய பொக்கிஷவீட்டைத்திறந்து அரசர்களுக்கெல்லாம் ஆடையாபரணபூஷணாதிகளையும் சந்தன புஷ்ப தாம்பூல மரியாதைகளையும் சோளராஜனால் செய்யப்பெற்று விருந்துசெய்துண்டபின் அக்கலிங்கதேசத்திற்சில நாடுகளைத்தேவகுலத்தாராகிய வளநாட்டதிபதிகளுக்குகசோளனால் கொடுக்கப்பெற்றார்கள்.

மற்றரசர்களுக்கெல்லாமரியாதை செய்து அவரவர்களிருப்பிடமனுப்பிவிட்டுத்தாமும் தேவகுலத்தரசர்களும் புறப்பட்டு காஞ்சிபுரமுதலிய சில நகர்களில் இவர்களையிருக்கச்செய்து மனுநீதிச்சோளனும் திருவாரூர் நகரத்தினிடமாகவிருந் தரசுபுரிந்து

வந்தார். தேவகுலநாட்டரசர்களும் கலிங்கதேசத்தில் சில நாட்டையும் காஞ்சிபுரம் முதலாகிய சிலநாட்டையும் அரசுபுரிந்து வந்தார்கள்.

(தென்மதுராபுரி வந்தசருக்கம்)

கவி

இணையிலாதவனிறப்பொடுபிறப்பெனுங்கடற்கோர்
புணையுமானவன்புனிதர்கண்மனத்துறைபுனிதன்
பணைகொடிண்புயப்பாண்டவர்க்ககத்தினும்பரத்துந்
துணையதானவன்றுணைப்பதம்நமக்கினித்துணையே.

(கதை)

கேட்டீர்களோ முனிவர்களே இவர்களிவ்வாறரசு புரிந்திருக்குங்காலத்தில் மனுநீதிச்சோளனும் தனது வாணுட்கழித்து சிவசாரூபியத்தையடைந்தான். அவனது மரபிலுள்ளோர் வழிவழியரசுபுரிந்துவருங்காலத்தில் இந்திரகுலத்து மூதாக்களும் தமமரபிலுள்ள வழிவழியாக அந்நாட்டில் வசித்துவந்தார்கள்.

சிலகாலத்துக்குப்பின் குலோத்துங்கசோளனென்ற பேர்கொண்டவரசன் அரசுபுரியுங்காலத்தில் கன்னிநாடாகிய பாண்டிநாட்டையரசாக்ஷிசெய்துவந்த உக்ரமபாண்டியனது மரபிலுள்ளவர்கள் வழிவழியரசுபுரிந்துவருநாள் வீரபாண்டியனென்னுமரசநீதியாகச்செலுத்திவருநாளில் திருவாரூரிலரசுபுரியும் குலோத்துங்கசோளனென்பவன்றமது மந்திரிமார்களோடிருந்து ஓராலோசனைசெய்யத்தொடங்கினுன்.

வாராய் மந்திரி துவாதசாந்த க்ஷேத்திரமாகிய மதுரையம்பதிக்குச்சென்று மீனாட்சி சுந்தரேஸ்வராள் தெரிசனஞ்செய்யும்பொருட்டு நமது முன்னோனுகிய காடுவெட்டிசோழனென்பவன் மந்திரி பிரதானியருடன் சென்று வைகை நதிக்கி வடகரையிலுள்ள பூஞ்சோலையில் தங்கியிருக்கும்போது அன்னதியின் மிகுதியாகிய பிரவாக வெள்ளம் வந்துவிட்டதால் ஆலயஞ்செல்லமுடியாமல் சிவதரிசனஞ்செய்யத் தடைபட்டதால் ஆகாரம் பொசிப்

பதில்லை யென்றன்றிரவிலுபவாசமாயிருப்பதறிந்த மந்திரிகள் ஒரு
வித சூக்ஷியாக வோர் சிவலிங்கத்தை யேற்படுத்தி யரசரிடத்தில்
வந்து பிரபூ யிப்பூஞ்சோலையில் யாவர் பூசித்த லிங்கமோ யிங்கிரு
க்கிறது யென அதற்கு நமது முன்னோனாகிய காடுவெட்டி சோழ
னுடனே யச்சிவலிங்கத்துக்கபிஷேக நைவேத்தியங்களைச் செய்து
தரிசனம்பண்ணி டோரவிற் சென்று போஜனம் பண்ணி சோப
மாய்ப்படுத்து நித்திரை செய்யலானான்.

தற்சமயம் கயற்கண்ணிமணாளனாகிய சோமசுந்தரக்கடவுள்
ஓர் வேதியரைப்போல் வடிவுகொண்டு வடக்குவாசற்கோட்டைக்
கதவைத்திறந்து நதிப்பெருக்கையும்வழிவிடச்செய்து சோளராஜ
னிடம் வந்து நித்திரைதெளிவித்தழைத்துக்கொண்டுபோய் பாண்
டியனுக்குத்தெரியாதபடி சுவாமி தெரிசனஞ்செய்துவைத்து விபூ
திப்பிரசாதங்களையுங் கொடுத்தழைத்துவந்து இந்நதிக்கரையில்
சிவப்பிரதிஷ்டை செய்து தெரிசித்தவைராக்கியபக்தியைக்கொண்
டு நாமிவ்வாறுமக்கு அருள்புரிந்தோம் உனதுமரபிலுள்ளவர்க
ளுக்குமிப்பாண்டியன்மரபிலுள்ளவர்களுக்கும் சம்மந்தம் செய்து
கொண்டிருந்தவழக்கத்தை விட்டுவிடாதபடி சூரிய குலத்துக்கும்
சந்திரகுலத்துக்கும் சம்மந்தவியற்கையாதலால் அவ்வாறு நடத்தி
வரல்வேண்டுமென்றருளியபிரகாரம் பிற்காலத்திலுமவ்வாறு நடந்
துவந்தது. இப்போது நமது ராஜகுமாரத்தியை அம்மதுரை நக
ரசனுக்கு மணம்புரிவித்தால் நாமும் மதுரைக்குச்சென்றுவரவும்
சுவாமிதெரிசனஞ்செய்துவரவும் யேதுவாயிருக்குமென்று தம்மு
டைய மந்திரிமார்களையனுப்புவித்தான்.

அவர்கள் மதுரைமாநகரம் வந்து அங்குள்ள மந்திரிமார்க
ளையுசாவ அடுத்தநாளரசன் அரண்மனைக்குவந்து இருவகை மந்தி
ரிமார்களும் தாங்கள் கொண்ட கருத்தை அரசனுக்கறிக்கையிட
வீரபாண்டியனதற்கிசைந்து சோழனது மந்திரிகட்கு வேண்டிய
மரியாதைகளைச்செய்து அவர்களோடு தமதுமந்திரிமார்களையுமனு
ப்பி அக்குலோத்துங்கசோழனது புத்திரியாகிய காந்திமதியென்
னுமருமைத்திருமகளை பாண்டியனுக்குப்பேசிமுடித்து முகூர்த்தம்

நிச்சயித்து மந்திரிகளும் மதுரைவந்து சேர்ந்தனர். அப்பால் பாண்டியனும் சதுரங்கசேனைகளுடனே சோளநாட்டிலுள்ள திருவாரூரென்னும் நகரம்புகுந்து சோழனெதிர் கொண்டழைக்க விடுதிவிடுசென்றபின் சுபமுகூர்த்த சுபலக்கினத்தில் காந்திமதியென்னும் பெண்ணை விவாகஞ்செய்து அவ்வரசனால் புத்திரிக்குக்கொடுத்த நாடுமுதலிய சீர்களைப்பெற்று மதுரைமாநகரம்வந்துசேர்ந்தான்.

அப்பாண்டியராஜன் விவாகஞ்செய்வதற்குமுன்னமே மோகஸ்திரீகள் பதினாயிரம்பேரை காந்திருவ மணமாகச்சேர்ந்து ஒவ்வொருத்திக்குமொவ்வொரு பிள்ளைகளாகப்பிறந்த பதினாயிரங்குழந்தைகளுக்கும் கல்விப்பயிற்சியுண்டாக்கி அரசர்க்குறியவித்தைகளெல்லாங்கற்று வாலிபதிசையடைந்திருந்தனர். இவ்வாறிருக்க அரசன் சோளனது புத்திரியாகிய பட்டக்காரியைச் சேர்ந்து வாழும் நாளில் மீனாட்சிசுந்தரேஸ்வரர் கிருபையால் ஓர் சற்புத்திரன் பிறந்தான். அப்புத்திரனை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்து ஐந்து வயதானதின்பேரில் பாடசாலையில் வைத்துப்படித்துவரும் நாளில் அவ்வரசன தூழ்வினைவலியால் சுருளிமலைக்கு வேட்டையாடப்போகக்கருதி மந்திரி முதலிய சேனைகளுடனே சர்வாயுதபாணியாகச்சென்று வேட்டையாடும்போது அக்காட்டில் பதுங்கியிருந்த புலியானது பாய்ந்து அவ்வீரபாண்டியனெனவரசனைக்கொன்றுவிட்டது.

அப்பால் மற்றுமுள்ள ஜனங்களும் மந்திரிகளுமிகுந்த பரிதாபத்தையடைந்தே மதுரை வந்து சேர்ந்து சோளராஜன் புத்திரியாகிய காந்திமதிக்கும் தெரியச்சொல்லி யாவருமிகுந்த விசனமடைந்து அழுது புலம்பி மந்திரிகளால் தேற்றத்தெளிந்து பின்னரசனுக்குச்செய்யவேண்டிய ருத்ரகிரிகைகளையெல்லாம் பட்டஸ்திரீ புத்திரனால் செய்துமுடித்து சிலநாட்சென்று மைனருக்கு முடிகுட்டவேணுமென்று சகலருங்கருதி அதற்குவேண்டிய முயற்சியையெத்தனிக்கும்போது தற்கால யிளவரசாகவிருந்து அரசு புரிந்து வந்த வைப்பாட்டிமக்கள் தங்களில் மூத்தவனுக்குப்பட்டங்கட்ட வேண்டுமென்று தடுத்து பொக்கிஷவீட்டையும் பூட்டிக்கொண்டார்கள்.

சில நாளிவ்விதவாதமாயிருந்து மந்திரிகளுடைய தந்திரத்தால சோளராஜன் புத்திரியாகிய காந்திமதி யென்னும் பெண்ணும் புத்திரனும் பல்லக்கேறி சில பாங்கியரும் சேவகருஞ்சூழ சில சுத்தவீரர்கள் ஆயுதபாணியாய் சூழ்ந்துவரத் தமது பிதாவினிடஞ் சென்று நடந்த வரலாற்றைச்சொல்ல அவ்வரசன் மிகுந்த கோபங்கொண்டு அந்த யிளவரசராகிய பதினாயிரம் பேரையும் போர்க்களத்தில் சித்ரவதை செய்துனது பிள்ளைக்கே முடிசூட்டி வைக்கிறேன் கண்மணி யென்று மகளுக்குரைத்து மாளவதேசாதிபதிக்கும் காம்போஜதேசாதிபதிக்கும் தூதனுப்பி வரலான அவ்வரசர் படைகளோடு கூடத்தமது நாட்டில் காஞ்சீபுர முதலியவிடங்களிலிருந்தரசுபுரியும் இந்திரகுலாதிபராகிய மூவகை யரசர்களையும் சதுரங்கசேனையுடனே வரச்செய்து தமது நால்வகைச்சேனைகளையும் தயாரித்து தமது புத்திரியையும் பேரனையும் பல்லக்கில் வைத்து யாவருமொன்றுகூடி தென்கடல்மேல் வடகடல் சீறியெழுந்ததுபோல தென்மதுராபுரியை நோக்கிப்பிரயாணமாகி வந்துரிடபகிரியென்று சொல்லப்பட்ட சோலைமலை சுந்தரராஜப்பெருமாள் கோவிலைச்சூழத் தனித்தனியே டேராவமைத்துத் தங்கள் தங்கள் சேனைக்கூட்டத்துடனே நாற்றிசைக்கடலும்பகவானுடைய கோவிலை வந்து சூழ்ந்ததுக்கொப்பாகச்சூழ்ந்திருந்தனர்.

சேனுமுனிவர்களே மறுநாட் காலையில் அரசர்களியாவரும் மந்திரி பிரதானிகளும் தலையருவினிடமாகச்சென்று தீர்த்தமாடி கோவிலுக்கு வந்து திருவாராதனை செய்வித்து

(கலிவிருத்தம்)

ஆதிநாயக வாரணநாயக
பூதநாயக பூமகனாயக
சோதிநாயக சோலைமலைவளர்
கீதநாயக கேசவராமனே.

யெந்தநாளுமிணையடிபோற்றிட
வந்தருள் புரிவாய்கருணாகரா
சுந்தரானந்தசோலைமலைவளர்
நந்தனேஜெகரக்ஷகராமனே.

(கதை)

யென்றிவ்வாறு அழகரைச்சேவித்துத் தங்களிருப்பிடமாகிய டேருவில் வந்திருந்தார்கள் அப்பால் போஜனகாரியங்களை முடித்து மந்திராலோசனை செய்யும்பொருட்டு யாவர்களுமோரிடத்தில்வந்து கூடினார்கள் சோளராஜன் மந்திரிகளைப்பார்த்து மேல்நடத்தவேண்டிய விஷயத்திற்கு ஆலோசனை சொல்லுங்களென்று கேட்க சாமபேததானதண்டமென்னும் நாலு காண்டங்களாகிய மனுநீதியை முற்றுமுணர்ந்த மந்திரிகள் சொல்லலானார்கள்.

அரசே நீதி தவராதபடி செங்கோல செலுத்து மரசர்களுடைய நாட்டை கைப்பற்றலாகாதென்பது சாமம். நீதி தவரிக் கொடுங்கோலரசர் நாட்டைக்கைப்பற்றலாமென்பது பேதம். தூதர்கள் மூலம்ாய் அறிக்கையிட்டு நமது குடைக்குள் சிற்றரசனாயிருந்து பகுதிகட்டிவரச்சம்மதமாவென்று விசாரித்தறிவது தானம் கட்டுப்படாத துஷ்டவரசர்களைத்தண்டித்து அந்நாட்டைக்கைக் கொள்ளலாமென்பது தண்டம். மூன்றுவது உபாயமென்னுந்தானத்தால் தாரானேல் தண்டத்தால் கவருதலென்பது மனுநீதி முறைமை.

ஆகையால் தூதர்மூலமாய் ஓலைபோக்கி குலகுமாரனுக்குப் பட்டங்கொடுப்பதாயிருந்தால் சமாதானத்தில் சில நாடுகளுங்களுக்குக்கொடுக்கப்படும் இல்லையென்றால் மனுமுறைப்படிதண்டித்து வாங்கலாகுமென்றெழுதிக்கேட்டாலதற்கவர்கள் கொடுக்கும்பதிலறிந்து யோசிக்கலாகுமென்றனர். அவ்வாறே சோளன்கையொப்பமிட்டு தூதர்கள் மூலமாய் ஓலையனுப்பினதில் அதற்கன்னவர்கள் பட்டக்காரி பிள்ளையென்றும் மற்றவர்கள் பிள்ளையென்றும் பேதகமென்ன ஒரு தகப்பன் பிள்ளைகள் தானே அதில் மைனருக்குப் பட்டங்கொடுப்பதானால் யெங்களுக்குமப்படியே நாட்டைப்பிரித்துப்பட்டங்கட்டி யெல்லோர்களையும் அரசர்களாகவிருக்கச் செய்தால் சம்மதம் இல்லையென்றால் மைனருக்கே சுதந்தரமாக்கி

யாசகர்களைப்போல எங்களை ஒதுக்குவதானால் நாங்கள் சம்மதிக்க மாட்டோம் இவ்வாறெங்கள் கருத்துக்கிசைந்து நடத்தவில்லையென்றால் தமது மனமெப்படியோ அப்படிச்செய்கிறதென்று பதில் ஓலையனுப்பினார்கள்.

அதுகண்டு காம்போஜராஜனும் மாளவராஜனும் இந்திர குலாதிபவரசர்களில் ஆதியில்காரதமுனிவரால் ரஜோ தமோ சாத்மீகமென்னுமுக்குணவியற்கைப்படி வகுக்கப்பட்டதில் ரஜோ குணத்தையுடையவன் கள்ளரசனென்றும் தமோ குணத்தையுடையவன் மறவரசனென்றும் சாத்மீகருணத்தையுடையவன் அகம்படையாவரசனென்றும் சொல்லிய முக்குலத்தாரில் முதற்கூறிய குலத்திற்பிறந்த விஜபவரதனென்னுமரசனும் அவ்வழிமரபிலுள்ளவர்களும் இரண்டாவது குலத்துக்குறிய சந்திரகாசனென்னுமரசனும் அவ்வழிமரபிலுள்ளவர்களும் மூன்றாவது குலத்துக்குறிய யேகாம்பரவரசனும் அவ்வழிமரபிலுள்ளவர்களும் ஒன்றுகூடி ஆலோசித்து தங்கள் தங்கள் புஜபல பராக்ரமங்களைக்கூறி குலமகளாயுள்ள பட்டஸ்திரீ புத்ரனுக்கும் வைப்பாட்டி மக்களுக்கும் சரிபாகஞ்செய்வது சரியல்ல யுத்தத்திற்குச்சம்மதித்து திருபம் யெழுதுங்களென்று சொல்லலானார்கள்.

அப்போது சோளராஜனும் சற்றுலோசிக்கையில் இந்திருகுலாதிபர்கள் சோளனைப்பார்த்து மகாமேருவையொப்பாகத்தாங்களும் அதைச்சுற்றிலுமுள்ள அஷ்டகுல பர்வதங்களைப்போல நாங்களுமிருக்க யின்னும் நமக்குதவியாக அரசர்களும் படைகளுமுதவியாகவிருக்க ஆலோசனையாயிருப்பதென்ன அப்படி சத்துருக்களை ஜெயித்து குழந்தைக்கு வெற்றிமாலையைச் சூட்டுவோமேயாகில் யெங்களுக்குப்பிரதியுபகாரமாகயேற்படுகிற கைம்மாறு இன்னதென்று பெருமாள் சாக்ஷியாகவும் இவ்வரசர்கள் சாக்ஷியாகவும் சித்தசுத்தமாகச் சொல்லும்பக்ஷத்தில் அவர்களுடன் போர்புரிந்து ஜெயிக்க நாங்களே போதுமென்றனர்.

அதுகேட்டு சோளராஜனும் மைனருக்கு முடிசூட்டிவைப்பீர்களாகில் இப்பாண்டிதேசத்தில் பாதிநாடுங்களுக்குக்கொடுப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை உண்மையென்றனன்.

இவ்வாறு பேசிமுடித்தபின் தென்மதுராபுரிக்குத் தூதர்கள் மூலமாய் சமாதானமாய் கொடுக்கும் |நாட்டைக்கைப்பற்றிக்கொண்டு நமது புத்திரியின் பிள்ளைக்கு முடிசூடச்சம்மதமாகில் சகலருக்கும் சர்வ சம்மதம் ஒவ்வொரு பிள்ளைகளுக்குந் தனித்தனி பட்டங்கொடுப்பதானாலது தகுதியல்ல. இருவகைப்பேரும் போர்க்களத்தினின்று யுத்தஞ்செய்தால் ஜெயித்தவர்களுக்குப் பட்டமும் நாடும் சுதந்தரமாகும் யுத்தஞ்செய்யச் சம்மதமாயிருந்தால் பதிலனுப்பவேண்டுமென்றிரண்டாவதோலை போக்கினர்கள் அதையறிந்தவர்கள் ஒருவாரம் வாயிதாக்கொடுப்பீர்களாகில் ஒன்பதானாள் போர்புரியலாகுமென்று பதில் நிருபமனுப்பினார்கள்.

அவ்வாறு சரியென்றிவர்களுஞ்சம்மதமாய் அழகர்கோவிலுட்சென்று ஜெகரட்சகனைப்பணிந்து யெதிரிகள் போருக்குச்சம்மதித்தோலையெழுதினார் சுவாமிகள் திருவுள்ளமெப்படியோவென்றோலையைச்சன்னதியில் வாசித்துக்காட்டிப் பிரார்த்தித்தவுடனே நாளையத்தினம் விடைகொடுப்போமென்றசரீரிவாக்குப்பிறந்தது அதுகேட்டரசர்களுந் தங்கள் தங்கள் டேராவில் வந்துசேர்ந்தார்கள். மறுநாளிரவில் உலோகரட்சகனாகிய வெம்பெருமான் ஜடகோப ஆழ்வாரென்னும் நம்பியரைப்போல் வேடமாறி சோளராஜனது கனவில் வந்தருளி சோளபூமா நமதாலயத்திற்குத் தென்புரமாகவிருக்கிற விசாலமாகிய காலியிடத்தில் கல்லுக்கம்பமாகிய தரியை யூன்றி அதனிடமுமது கொடியை நாட்டிக்களப்பலிக்கொடுத்து அவரவர்களிஷ்டகுல தெய்வங்களை வணங்கி அவ்விடத்தில் சத்துருக்களோடு யுத்தஞ்செய்தால் உங்களுக்குப்படைத்துணையாக நாமும் வருவோமுங்கள் கட்சி வெல்லுமென்றுத்திரவளித்தாலயத்துட்புகுந்தனர்.

அவ்வாறு பஹறவான் வாக்கின்படியே இஷ்டகுல தெய்வங்களைப்பூஜிப்பதற்கெத்தனித்து சோளராஜனுக்கு வழிபடுகடவுளாகிய ஸ்ரீ ரங்கநாயகருக்குப்பதிலாக சுந்தரராஜப்பெருமாளையும் இந்திரகுலாதிபர்கள் தஙகள் முன்னோர்காலந்தொடங்கி வழிபடுகடவுளாக வரும் ஹரிகரபுத்திரனை ஐயனாரையும் தாய்வழியிற் கிடைத்த அகோரவீரபத்திரனையும் தமது மூதாக்கள் வணங்கிவந்த வழக்கப்படி வணங்கியும் காளிகாதேவியை யுத்தகளத்திற்கும் பாவாகனமாகப்பிரதிஷ்டை செய்து ஆடு எருமைக்கடா முதலியவைகளைப் பலிகொடுத்துப் பிரார்த்தித்து அப்பால் எதிரிகள் வரும் வழியை யெதிர்பார்த்திருந்தனர்கள்.

இங்கு இவ்வாறிருக்க மதுரையில் இளவரசர்களாக விருந்த பாண்டியன் புத்திரர்கள் தங்கள் நாட்டிலிருக்குஞ் சிற்றரசர்களுக்கோலைபோக்கி அவரவர்கள் படைசகிதமாய் வரச்செய்து மீனாக்ஷி சுந்தரேஸ்வரருக்கபிஷேக நைவேத்தியங்களை நடாத்தி வடக்குவாசல் செல்லத்தம்மன் கோவிலுக்குப் பொங்கல் பலி பூஜை முதலியதுகளைச்செய்து பிரார்த்தித்து தங்கள் ரதகஜதுரகபதாதிகளை யலங்கரித்துப் பதினாயிரம்பேர்களும் சர்வாயுதபாணிகளாக வில்லம்புகள் கொண்டு முதுகில் அம்புராத்தூணிகட்டி வழக்கமாய்த் தரித்திருந்த வேப்பம்பூமாலையை நீக்கித் தும்பைமாலை புனைந்து பேரிகை யெக்காளம், கொம்பு, தம்பட்டம், தவில், முரசு, தாளம் நாகசுரமேளமுதலிய பதினெண்வாத்தியங்களுமுழங்க யானைமேற் சிலவீரரும் குதிரைமேற் சில வீரரும் தேரின்மேற் சிலவீரரும் இப்படியாகப் போர்க்களம் வந்துசேர்ந்தார்கள்.

இது சமாச்சாரம் அமராபதிக்கரசனாகிய தேவேந்திரனுக்குத் திரிபுவனசஞ்சாரியாக நாரதரால் கேள்வியாகி இந்திரனுமற்றுமுள்ள முப்பத்துமுக்கோடி தேவர்களும் கெருடகந்தருவர்களும் ரகசியமாக ஜெயாவபஜெயமெப்படியோவதைப்பார்க்கவேண்டுமென்றந்திரவாசிகளாக வந்திருந்தார்கள் யுத்தகளத்திற் கல்லின்கம்பமாகிய தரியும் அதன்மீது புலிக்கொடியும் நிற்க வடபாரிசத்திற் சோளராஜன் படையும் இந்திரகுலாதிபர் படையுமற்றுமுள்ள வரசர்கள் படையுங்கருடவியூகமாக அணிவகுத்து நின்றனர்கள்

தென்பாரிசத்தில் மதுராபுரி யிளவரசர்களுமற்றுமுள்ள சிற்றரசர் படைகளுமொன்றாகூடி சக்கிரவியூகமாக அணிவகுத்தார்கள்.

அப்பர்விருதிறப்படையும் வெற்றிசங்கு, வீரசங்கு, வலம்புரி சங்கங்களையும் பம் பம் பம் மென்று முழக்கி சகல பேரிகை வாத்தியங்களுமுழங்க அரசர்களுத்திரவின்பேரில் சுகசாரணர் கைகாட்ட யானை வீரரும் யானை வீரரும் குதிரை வீரரும் குதிரை வீரரும் தேர் வீரருந்தேர் வீரரும் வில் வேல், வாள், பிண்டி, பாலா, ஈட்டி, கத்தி, கேடயமுதலியவாயுதங்களைக்கையினிடமாகக் கொண்ட காலாட்படையுங்காலாட்படையுமாக யிவ்வாறு கைகலந்து அபரிமிதமான போர்புரிந்தனர்கள்.

முதனாட்போரில் காம்போஜதேசத்தரசன் படையும் மாளவ தேசத்தரசன் படையுமுறிந்தோடினதை யிந்திரகுலவரசர்கள் கண்டு அஞ்சவேண்டாம் நில்லுங்களென்று கையமர்த்தித்தங்களுடைய தேர்களைத்தூண்டி பராக்கிரமத்துடன் வந்து சத்துருக்கள் படையிற் பிரவேசித்து யானை குதிரை காலாட்படைகளையும் துவம்சப்படுத்தியனேக வீரர்களை மாய்த்தது அன்று சூரியனஸ்தமனபரியந்தம் போர்செய்து தங்கள் தங்கள் பாடிவீடுபுகுந்தார்கள்.

இரண்டாநாட் போரில் மதுரை யிளவரசற்குதவியாக வந்த பாஞ்சாலங்குரிச்சி சிற்றரசன் படையும் ரெட்டயாபுரத்தரசன் படையுமட்டகாசம்பண்ணி பராக்கிரமத்தோடு போர் புரிந்து சோளராஜனது படையிலு யாளவராஜன் படையிலுமனேகர்களை வதைத்துக்கால்வேறு கை வேறு உடல் வேறு தலை வேறு கண்ட கண்ட துண்ட துண்டமாக நறுக்கிச் சேதப்படுத்தி அப்படையை முறிந்தோடும்படி யடித்தார்கள் அன்றுபகல் நீங்கிப்பாடி வீடு சேர்ந்து வடதிசையரசர்கள் பெருமானைவணங்கி அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகா ஆதிமத்யாந்தரகரஹிதா சர்வஜனரக்ஷகா இரணியனிராவணன் கும்பகர்ணன் முதலிய வசுரர்களையெல்லாஞ்சங்கரித்து வெற்றிமாலையைச்சூடி இந்திரன் முதலிய வானுட்டார் மாதவமுனிஸ்வரர்களது இடுக்கண்களைத்தீர்த்து இரக்ஷித்துக்காத்தருளிய வெம்பெருமானை

கிருபைக்கடலே இன்றுதினம் எட்டயாபுரத்தரசனும்பாஞ்சாலங்
குறிச்சிபாசனுந்தங்களிஷ்ட குலதெய்வமாகிய சக்கம்மதேவியினு
டைய வாரதனையால் எங்கள் படையை முறிந்தோடவடித்தும்
யானை குதிரை தேர் முதலியவைகளைச்சேதித்து வெற்றிச்சங்க
முழக்கும்படியாய்விட்டதே காஞ்சிபுரத்திலும் திருவாரூரிலும் ஸ்ரீ
ரெங்கத்திலும் சேஷமாமலையிலும் வழிபடுகடவுளாக இருக்கக்கூ
டும் நீ அனந்தசயனத்திற் பள்ளிகொண்டிருந்தாற்போலப்பேசா
திருப்பையேயாகில் நாங்களென்செய்வோம் பட்டஸ்திரிபின்னோ
க்கிப் பட்டங்கிடையாதிழந்து நாங்களும் புறங்காட்டுவோமாகில்
பொது குலதெய்வமாகிய வுமக்கும் ஹரிகரபுத்திரனாகிய வையனா
ருக்கும் கைலாசபதியாகிய சாக்ஷாத் சிவபெருமானது நெற்றிக்
கண்ணாகிய அக்கினியிற்பிறந்த வீரபத்திர சுவாமிக்கும் யென்ன
குற்றஞ்செய்தோம் ஜெயங்கிடைப்பது தெய்வானுகூலமேயல்லது
வேறில்லை. முன்கனவில் வந்தருளிச்செய்தபடி நனவிலும்வந்து
சாக்ஷிகொடுத்து படைத்துணையாய் யுத்தவேஷமாய்வரவேண்டுமெ
னப்பிரார்த்தித்தனர்கள்.

அதுகேட்டுக்கண்ணபிரானும் அப்படியே நல்லதென்ற சரீரி
வாக்கருளினர் பின்பரசர்களுங்கூடாரம் வந்துசேர்ந்தார்கள் அன்
றிரவில் விடிந்தகாலையில் யெம்பெருமானானவர் வேடர்வடிவமாய்ப்
ப்போர்க்கோலங்கொண்டனர் ஆழ்வார் பதினெண்பேரும் வே
டவீரர்களாகியும் சர்வாயுதபாணிகளாகவும் தமது வரபுத்திரனா
கிய பதினெட்டாம்படி வாசலில் நிற்கும் சந்தனக்கருப்பு தெய்வ
மும் போர்க்கோலங்கொண்டு சல்லடங்தொட்டு கருங்கச்சையை
வரிந்து கட்டி தட்டுத்தடி, வெட்டரிவாழ், தண்டு, கத்தி, சூலம்
ஈட்டி, இவைகளைச் சுவாமி முதலிய வீரர்களெல்லாம் கையினிட
மாகக்கொண்டுவரவும் நாச்சியாரம்மனும் வேடுவச்சியாக வடிவு
கொண்டு ஸ்ரீதேவதையாகிய குழந்தையையுங் கையினிடமேந்தி
சுவாமியின் பின்னாகவரவும் பதினெண்வித வாத்தியங்களும் அண்
டம் வெடிபட முழங்க மூன்றுநாளருணோதயத்தில் காகபுசுண்டர்
வாழும் பெருமான் மலைச்சாரலில் வந்து காடு கலைத்து வேட்டை

பாடிவருகிறவர்களைப்போல மாயாவுதாரனாகிய பெருமானும் மற்றுமுள்ள வீரரும் நீலநிறக்குதிரைகளிலேறி ஆளொன்று குதிரையொன்றாகக் கத்திசேடயந்தாங்கி! சகல வாத்தியங்களுமுழங்க இந்திரகுலாதிபர்கள் படைவீரர்களோடு கலந்துபோர்க்களம் வந்துசேர்ந்தார்கள்.

ஆனால் வைகுந்தவாசனாகிய கண்ணபிரான் கொண்ட வேடவடிவமான துசத்துருக்களுக்கும் மற்றுமுள்ளவரசர்களுக்கும் கள்ளராஜாக்களாகிய வீரரைப்போலவே தோற்றினது.

மூன்றாநாட் காலையில் இருவகைப்படைகளும் அணிவகுத்து போர்செய்யத்தொடங்கினார்கள் மதுரையிளவரசர்கள் படைகளும் பராக்கிரம சௌரியங்களைக்கூறி இவர்களது படைத்திரளை இன்று போரில் பஞ்சாகப்பறக்கடிக்கிறோமென்று சபதங்கூறி யுத்தஞ்செய்யும்போது பாண்டியனிளவரசர்கள் படைகளையும் உதவியாக வந்த சிற்றரசர்கள் படைகளையும சின்னபின்னமாக்கி ரதம் கஜம் துரகங்களையும் சிதைத்து முறிந்தோடச்செய்து பாண்டியனுடைய இளவரசர்களிற் சிலரை வதைத்தும் சிலரை மூர்ச்சையாகச்செய்தும் இவ்வாறு நானாவிதமாகத் தும்சப்படுத்தியும் அன்று பகல் நீங்கித்தங்கள் பாடிவீடு வந்தனர்.

இவ்வாறாகவேமாயனது கிருபாகடாட்சத்தால் பத்துநாள் வரை போர்புரிந்து பாண்டியனது இளவரசர்களையும் முறிந்தோடின சிற்றரசர்களையும் அன்னவர்கள் படைகளையும் தப்பித்தோடினவர் தவிர போர்க்களத்தில் நின்ற வீரர்களையும் படைகளையும் குத்தியும் வெட்டியும் தண்டாலடித்தும் அஸ்திரங்களைப்பிரயோகித்தும் பலவிதமாகவவர்களை யெல்லாங்கொன்று இரத்தவெள்ளமானது நதிபோற் பெருகியோடவதனிடமாக யானைத்தலைகளுங் குதிரைத்தலைகளுஞ் சத்தவீரருடைய அவயவங்களும் இரத்தவெள்ளத்தில் மிதந்துவர காக்கை, கழுகு, பருந்து, நரி, நாய்களும் பேய்களும் தசைகுடல் முதலிய பிணங்களையும் வாரிப்பிடுங்கித்தின்ன விருந்தூட்டியுமிவ்வாறு சத்துருக்களை ஜெயித்து

அரசர்களும்மற்றுமுள்ள வீரர்களுஞ்சோலைமலைமேற்சென்றுதீர்த்த மாடிவந்து பழவாறுடைய சன்னிதானத்திற்சென்று பெருமா ளைச்சேவை செய்துகொண்டு எங்களைக்காத்து ரட்சித்த கடவு ளேயென்று துதித்து சோளன் முதலிய வரசர்களெல்லாரும் தங்கள் தங்கள் கூடாரம் வந்துசேர்ந்திருந்தனர்கள்.

கேட்டீர்களோ நைமிசாரண்ய முனிவர்களே யென்று சூத புராணிகர் சொல்லியருளவும் முனிவர்களியாவருமானந்தமடைந் து சூதமுனிவரைப்பார்த்துச் சொல்லலாயினர்.

அஃதென்னெனில் (சுவாமி) இம்மனுநீதிச்சோளன் முன்னோ ர்களில் நீதிதவறாத சிபிச்சக்கிரவர்த்தியின் தருமக்குறிப்பை யறி வதற்காக கைலாச கொடிமுடியினின்று சிவபெருமான் வேடனாக வந்து எமதருமனைக்காட்டுப்புறாவாக வரச்செய்து அப்புறாவின் பேரிலம்புதொட்டு அப்புண்வழியிலுதிரஞ்சொட்டிடவும் அப்பு றாவானது வேடனுக்குப் பயந்து ஓடிவந்து சிபிச்சக்கிரவர்த்தி நானுன்னடைக்கலமென்றவன் மடியில்விழ அவ்வரசன் புறாவின் றளர்ச்சியைக்கண்டு அதைக்களைதெளியச்செய்து சரீரத்தை தட வி அஞ்சவேண்டாமென்று மடியில் வைத்திருந்தபோது சிவ வேடன் சோழன் முன்வந்து பிரபு யான் வேட்டையாடிய புறாவா னதுன்னரண்மனைக்குட் புகுந்தது அதனைத்தேடிவந்தேனதைக் கொடுக்கவேண்டுமென, சிபி அடைக்கலமாக வந்ததை கொடுக்கே ன் அதற்கீடாக எதுவேண்டினுந்தருவேன் பெற்றுக்கொள்ளென் றுசொல்ல வேடனப்புறாவைத்தவிர மற்றொன்றும் வேண்டேன் என் புறாவையே தரல்வேண்டுமென ராஜன் அதைத்தவிர மற்ற தைக்கேளென வேடன் நீர் நீதிதவறாமன்னன் வேடன் வேட்டை யாடிய புறாவைத் தருவதில்லை யென்பது நீதியல்ல வென்ற வேட

னைப்பார்த்து எனதுயிர்முதலாகவென்றேசத்தை கேட்கினுந்தருவேனல்லது அடைக்கலப்பொருளைத் தருவதில்லையென்றவரசனைப்பார்த்து வேடன் தராசுகொண்டுவந்து தூக்கி புராவையொரு தட்டில்வைத்து அப்புராவினிடைக்கி உமது திரேக மாமிசத்தையறுத்து நிறுத்துக்கொடுப்பீராகிலெனக்குச் சம்மதமென்றனன் அவ்வாறரசனும் புராவொருதட்டிலும் தன் மாமிசத்தையோர் தட்டிலுமறிந்துவைக்க அப்புரா எமனானதால் உடலிற் பூராவுமுள்ள மாமிச முழுதுமறிந்து வைக்க வைக்கப்புராவின்றட்டுக்கீழாகவே நின்றது அப்பாலரசன்றானுமத்தட்டிலேறினன் அப்போது தராசு முனைசரியாக நின்றது அத்தருணம் வேடனான கடவுள் கிருபைகூர்ந்து தனது யதார்த்த வடிவுடன் காக்ஷி கொடுத்தனர் எமதருமனுமெதார்த்தவடிவுடனின்றனன்.

அப்பால் சிவலோகத்திலிருந்து விமானத்தையழைத்து சக்கிரவர்த்தியினுடலையொன்றுபடுத்தித்தமது திருக்கரத்தாற்றடவி தேக பரிசுத்தமாக்கி சோளனாகிய சக்கிரவர்த்தியை மோக்ஷவுலகத்திற்சேர்த்தனர். அச்சோழனது மரபில்வந்த மனுநீதிச்சோழன் புத்திரியாகிய காந்திமதியின் புத்திரனுக்கு இந்திரகுலாதிபர் முடிசூட்டிவைத்த விபரத்தைச்சொல்லியருள வேண்டுமென்று சூகமுனிவரைக்கேட்கப் புராணிகர் சொல்லத்தொடங்கினர்.

(பாண்டியன் புத்திரனுக்கு முடிசூட்டிவைத்த சருக்கம்)

கவி

தரணிதனிலனைவயிற்றிற்றசமாத்திங்கடயங்கியவ
  ளீன்றதற்பின்மருடானெய்த
விருநிலத்திற்கிடந்திருந்துதவழ்ந்துகாட்டியிலங்க
  நடநதெழிலுருமன்மதன்போலாகி
பரிவையர்கள்கலவியெனுமளக்கர்வீழ்ந்துவறு
  நிறைபத்தழுந்தியுயிரலைபாவண்ணன்
திருமகள்தன்னுபகனைத்துதிபின்துய்யதினகரனேக்
  காணிமம்போற்பவங்கடீர

(கதை)

கேளுங்கள் முனிவர்களே யுத்தமுடிந்தவுடன் சோளராஜனிந்திரகுலாதிபவரசர்கள் முதலிய வீரர்களெல்லாரும் அழகர் சன்னதியிற்சென்று சுந்தரராசனை வணங்கி அங்ஙனமாசனத்தி லெழுந்தருளியிருந்த திருமலைபாண்டாரவர்களால்ஜடகோபத்தை யரசர் முடியிற்சூட்டிமாலை திருத்துளபம் தீர்த்த முதலிய பிரசாதங்களும் பெற்றவ்வாண்டாரவர்களை வணங்கி அவரிடம் உமதரசன் புத்திரனுன பாண்டியனுக்கு முடிசூட்டவேண்டியிருப்பதால் சுபமுகூர்த்தநாளிட்டுக் கொடுக்கவேண்டுமென்றரசர்கள் கேட்க அதற்கன்னவர் முடிசூட்டும் நாளை நிட்சயித்து நாமும் நமது கடவுளாகிய சுந்தரராஜப்பெருமாளும் உங்களுக்கே சொந்தம் உங்களுடைய அனுக்கிரகத்தினால் இந்தப்பெருமாள் சன்னதியானது நித்தியோற்சவம் இரத வுற்சவம் யாகாதியெக்கியங்களோடு அபிவிர்த்தியாக விளங்கக்கடவதென்றும் போர்முகத்திலுங்களுக்குப் படைத்துணையாக வந்த ரூபமாகிய நீலமேகச் சாமளவர்ணன் எனனுங்கருப்பணசுவாமியை இந்த இந்திரகுலாதிபவரசர்கள் இஷ்டகுலதெய்வமாக்கொண்டு வணங்கி வரல்வேண்டுமென்றும் ஆழ்வாராசிர்வதித்தனர்,

அரசர்களுமதற்கிசைந்து தங்களிருப்பிடம் வந்துசேர்ந்து
சகலருமொன்றுகூடி பாண்டியன் பட்டஸ்திரீ குமாரனுக்கு சோ
லைமாமலையருவித்தீர்த்தத்தினால் திருமஞ்சனமாட்டி ஆடையாபர
ணாலங்கிருதஞ்செய்து பட்டத்து யானையின்மீதம்பாரிவைத்து கு
ழந்தையை யதன்மீதேற்றி அரசர்களுந் தங்கள் தங்கள் வாகனங்
களிலேறிப் போர்க்களத்தினுயிர் பிழைத்திருந்த படைகளுடனே
பதினெண் வாத்தியங்களுமுழங்க மதுரைமாநகரம் வந்துசேர்ந்
து அங்குள்ளவர்களாலெதிர் கொண்டழைக்கப்பெற்று மீனாக்ஷி
சுந்தரேஸ்வராள் சன்னதிமுன் வரவே கோவில் ஸ்தானியரும்
மேளவாத்தியத்துடன் அரசர்களை யழைத்துப்போய் சுவாமிதரிச
னைசெய்துவைத்து அரசர்களுக்கு மாலை சந்தனவிபூதிகொடுத்துத்
தாமும் கூடவே வர குடைசுருட்டி விசிறி வெண்சாமரம் ஆலவட்
டம் மகுடதோரணங்கள் சூழ்ந்துவரவும் வேதவேதியர் அட்சதை
புஷ்பமிரைத்துவரவும் அரம்பை, யூர்வசி, மேனகைக்கிச்சரியான
மாதர் நடிக்கவும் மஹா சம்பிரமத்துடனே சபவேளையிலரண்ம
னைக்குட் பிரவேசித்துப் பாண்டியராஜனது ரத்தினமணி சிம்மாத
னத்தில் பிள்ளையை யிருக்கச்செய்து மற்றுமுள்ளவரசர்களுமவர
வர்களுக்கிட்ட வாசனத்திலிருக்கச்செய்து மந்திரிமார்களும் வேத
வேதியர்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் புடைசூழ்ந்திருக்க
சந்திரகுலத்தரசர்களாகிய பாண்டியர்களுக்கு குலகுருவாகிய
கௌதமமுனிவரும் வந்து சபவேளையில் வேதமந்திர பூர்வீகமாக
ஓமம் வளர்த்த அக்கினியானது நெய்யையுண்டு நமது கோத்திர
வழியில் பிறந்த பெண்கள் வம்மிசத்தில் வந்த யிந்திரகுலவரசர்
களுக்கு யோகம் வாய்த்ததென்றக்கினி யோங்கிவளரவும் பலவாத்
தியங்கள் முழங்க வேதியர் வேதமுழக்க கூடல்நாயகராகிய சோ
மசுந்தரக்கடவுள் செட்டியாக வந்து விற்கலான மாணிக்கமுதலிய
ரத்தினங்களை வாங்கிப்பதித்திருந்த கோடி சூரியப்பிரகாசம்

பொருந்திய கிரீடத்திற்கு மாலை சந்தன அட்சதபுஷ்ப முதலான வைகளைச்சூட்டி பட்டத்தியானைமீதுவைத்து பட்டணப்பிரவேசஞ்செய்து கௌதமமுனிவரால் மகுடத்தைஏற்று சங்கைகுலதிலகனாகிய வேளாளன் கையிற்கொடுத்து அவனால் வாழ்த்திக்கொடுக்கச் கௌதம முனிவர் வாங்கி சுப வேளையில் பாண்டியராஜகுமாரனுக்கு முடிசூட்டி வாசனைபொருந்திய புஷ்பமாலைகளுடனே வேப்பம்பூமாலையையும் புனையச்செய்து மீனக்கொடி கொடுத்து கன்னியாபூதரித்து செங்கோல்கொடுத்து வாழ்த்தினார்கள். இந்திரகுலாதிபர்களும் மாலைசூட்டி வாழ்த்தினார்கள். பாண்டிநாட்டுச் சிற்றரசர்கள் காணிக்கைகள் வைத்து வணங்கினார்கள்.

அப்பால் குலகுருவுக்கும் வேதவேதியர்களுக்கும் மற்றுமுள்ளவரசர்களுக்கும் பெரியோர்கட்கும் அவரவர்களுக்குத் தகுந்த மரியாதைகளைச்செய்து போஜனங்களை முடிப்பித்து சந்தனத்தாம்பூலமணிந்து சந்தோஷகரமாகவிருந்தார்களப்பால் கௌதமமுனிவரும் சிற்றரசர்களுந் தங்கள் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

இவ்வாறு செய்தபின் ஐந்தாம்நாளில் சோளராஜ மற்றுள்ளோரும் இந்திரகுலவரசர்களும் பாண்டியனது சபாமண்டபத்தில் வந்துகூடி அழகர்கோவிலில் வாக்குத்தத்தஞ்செய்தபடி பாதிநாடு பங்கிடவேண்டுமென்று வருஷநாட்டு மலையிலிருந்து வரக்கூடிய சிவகங்கா நதியாகிய வைகை நதியைத்தானே எல்லையாகக் குறித்து மதுரையில் நின்று தெற்குக்கடற்கரை வரையிலும் மேற்கு கடற்கரை வரையும் பாண்டியனுக்கென்றும் வைகைநதி மருங்கிலிருக்கின்ற பிரதான நகர்களாகிய இராமநாதபுரம் சிவகங்கை வடதிக்கிலுள்ள புதுக்கோட்டை வளநாடு இவைகளைச்சார்ந்த பக்கங்களிலுள்ள நாடுகளெல்லாம் இந்திரகுலாதிபர்களுக்கென்றும் அந்நாட்டிலுள்ள தேவாலய பிர்ம்மாலய சொர்ணப்புதை

பல்கனிதமுதலிய சமஸ்தபாத்தியங்களும் சந்திராத்தர் புல்லும் பூமிகல்லுங் காவேரியுள்ளவரையும் ஆண்டனுபவித்துச் சுகமாயாசரிவீர்களென்றும் இந்தப்பாண்டியனையுமவனது பூமிநகர்களையும் கண்ணுக்கிமைபோலக் காவல்செய்து பாதுகார்த்துவருவீர்களாகவும் என்று மூவரசர்கள் கையிலும் கணைபாழி கொடுத்துத் தரிக்கச்செய்துதாம்பூலமுங்கொடுத்தான் பாண்டியகுமாரன் சோளராஜனும் இந்திரகுலத்து விஜயவரதனென்னுமரசன் மரபிலுள்ளோர்கள் வழிவழி நமக்குச் ஜெயங்கொடுத்தருளிய சோலைமலை சுந்தரராஜப்பெருமான் ஆலயத்தை சர்வ சுதந்தர பாத்தியதையாய்த்தீர்த்தப்பிரசாதமாலை பரிவட்டமுதலிய வரிசைகளையும்பெற்று பாதுகார்த்துவரக்கடவீர்களென்று வாழ்த்தி விடைகொடுத்து இவ்விஜயவரதன் மரபிலுள்ளவர்களிற் சிலரும் மற்றுள்ள விந்திரகுலவரசர்களிற் சில வீரரும் தனக்குத்துணையாக வரவழைத்து தானும் மற்றுள்ளவரசரும் பிரயாணமாகி தங்கள் தங்கள் நகரம்போய்ச்சேர்ந்தார்கள். அப்பால் கேட்டீர்களோ முனிவர்களே யென்று சூதர் சொல்லலானார்:—

சோழன் முதலியோர் சென்றபின் இந்திரகுலாதிபர்களும் முடிசூடியயுவராஜகுமாரனும் மந்திரி பிரதானியர்களும் சோலைமலையழகர் சன்னிதானம்வந்து சுவாமிக்கு அபிஷேக நைவேத்திய தூபதீபாராதனைகளைச்செய்து தரிசித்தபின் நம்பிமார்களும திருமலையாண்டாரும் மற்றுமுள்ள வேத வேதியருங்கூடி மேற்சொல்லிய மூன்று நகர்களைப் பிரதானமாய்க்குறித்து சீட்டு எழுதிப்பெருமாள் சன்னிதானத்தில் வைத்துச்சிறு குழந்தையாகிய ஓர் பிராமணப்பிள்ளையால் எடுக்கச்செய்து வாங்கி சிரமீது வைத்தெடுத்து அவரவர் சீட்டிலுள்ள நகர்களை வாசித்துப்பார்க்க விஜயவரதவரசனுக்குப் புதுக்கோட்டை முதலிய நாளை வளநாடும் சந்திரகாசு

வரசனுக்கு இராமநாதபுர நகரும் ஏகாம்பரவரசனுக்குச் சிவகங்கை நகரமும் கிடைத்திருந்தது.

அப்பால் ஸ்தானீகர்கள் பாண்டிய ராஜகுமாரனுக்கும் இம்மூவகையரசர்களுக்கும் சடகோபம் சாத்தி மாலைசூட்டி தீர்த்தப் பிரசாதமுங் கொடுத்தபின் மூன்றுநாளங்கிருந்து ஸ்வாமிக்கும் படிவாசற்கருப்புக்கும் ஐயனார் வீரன் முதலிய தேவர்களுக்கும் செய்யவேண்டிய பூஜைகளைச்செய்து சுபயோக சுபதின சுபநட்சத்திரங்களில் தங்கள் தங்கள் நாடுகளிற் சென்று சில பகல் கழித்து சௌரியமாக ஒவ்வொரு அரசர்களும் பாண்டியராஜகுமாரனையழைத்து ஆங்காங்குள்ள பட்டவர்த்தனர்கள் புடைசூழ சுபதினத்தில் மங்களகரமாகப்பாண்டியனால் முடிசூட்டிக்கொண்டு வேத வேதியர்களுக்கும் பட்டவர்த்தனர்களுக்கும் வேண்டிய மரியாதைகளைச் செய்தனுப்பியபின் தம் தம் பத்தினிகளும் சந்தானவர்க்கங்களும சுபகரமாக அரசுபுரிந்து வாழ்ந்திருந்தார்கள்.

அப்போது விஜயவரதன் மரபிலுள்ளோர்களிற் சில வீரர்களைப் பாண்டியராஜகுமாரனுக்குதவியாகவும் சுந்தரராஜப்பெருமான் சன்னிதானத்தைப் பாதுகார்க்கவுங் குறிப்புள்ள சிலர்களை இவ்வைகை நதியின் வடகரைச்சார்பிலுங் கோவிலுக்கு மருங்காகவும் உள்ள மாகாணங்களிலும் நாடுகளிலும் நகர்களிலும் வசித்திருந்து வரவேண்டுமென்ற பஹுவானுத்திரவினால் இந்நாடுகளெங்கும் வியாபித்து பாண்டியராஜன் பயிர்போலவும் இக்குலவரசர்கள் சுற்றிலும் உள்ள வேலிபோலவுமிருந்து தங்கள் மூதாதையாகிய தேவேந்திரனால் பூஜிக்கப்பட்ட துவாதசாந்தக்ஷேத்திரமாகிய மதுரைமாநகரத்தையும் சோலைமலையழகர் ஆலயத்தையும் திருமோகூர் காளமேகப்பெருமாளாலயத்தையும் வாதவூர் முதலிய க்ஷேத்திரங்களையுஞ் சேதுவென்னுந் திருவணையையும் மற்றுமுள்ள

திவ்ய பாண்டிக்ஷேத்திரங்களையும் பாதுகார்க்குந்தேவர்களாகவும் முடியுடையரசர்களாகவும் நாட்டரசர்களென்னும் பெயரை வகித்தவர்களாய் பூமிலாபம் திரவியலாபம் சந்தான லாபமென்னும் அஷ்டைஸ்வரியங்களையும் பெற்வர்களாய் இலக்ஷ்மீ விலாசம்பொருந்தியவர்களாக சுபமங்களகரமாய் வாழ்ந்து வருகின்றார்களென்று சூதபுராணிகர் சொல்லிய இச்சரிதையைக்கேட்ட முனிவர்கள் பிர்ம்மானந்தமடைந்தார்கள்.

ஆகையால் முற்காலத்தில் இக்குலவரசர்களுக்குப் படைத்துணையாக வரும்போது எவ்வித ரூபிகரராய் அஸ்வவாகனாரூடராய் வந்தனரோ அவ்வாறு ஒவ்வொருவருடத்துக்கொருதடவை அந்த ரூபத்தைப்பின்வரும் எங்கள்குலத்தவர்களும் மற்றுமுள்ள யாவரும் காணக் சாக்ஷி தரல்வேண்டுமென்று இக்குல முன்னோர்கள் கேட்டுக்கொண்டபடி அதுமுதலிதுவரையிலும் எதிற்காலத்தும் சோலைமயில் வாழும் எம்பெருமான் அவ்வாறே யுத்தசன்னதரான வேடதாரியாய் ஒவ்வொரு சித்திரை மாசம் பௌர்ணமியன்று உலகோர்க்கு சாக்ஷிகொடுத்து சராசரங்களை ரக்ஷித்துவருகின்றாரென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே.

(வாழி விருத்தம்)

மதிமுடியண்ணல்வாழி மலைமகள் வாழி வாழி
கதிதரு கணேசன் வாழி கந்தன் கோவிந்தன் வாழி
துதிபெரு குருவும் வாழி தொல்லுலகரசர் வாழி
சதிருடன் படித்தோர் கேட்டோர் சகலரும் வாழி வாழி

சகலருக்கும் சுபகரமுண்டாக

...பெருமாள் துணை.

சென்னை-600 008
147899